விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 28 சனிக்கிழமை (10.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

## திருநெல்வேலி சந்தை, கடைகள் நிபந்தனையுடன் திறக்க அனுமதி

### வடக்கு சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தைத் தொகுதி மற்றும் கடைகளை நாளை ஞாயிற்றுக்கிழமை திறப்பதற்கு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த வியாபார நிலையங்கள் 19

## வவுனியாவில் கொரோனாவால் கணவனைத் தொடர்ந்து மனைவியும் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் கடந்த வாரம் கொரோனா தொற்றால் உயிரிழந்த முதியவரின் மனைவிக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் 19

## கொடிகாமத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் - வேவில் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப் 19

## யாழ்.மாநகர முதல்வர்

# மணிவண்ணன் கைதாகி பிணையில் விடுவிப்பு

### 10 மணி நேர விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் திங்கட்கிழமை விசேட விடுமுறை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள 19

### கடலில் மிதந்து வந்த

## திரவத்தினை அருந்திய குடும்பஸ்தர் உயிரிழப்பு

### நாகர்கோவிலில் சம்பவம்

(கரணவாய்)

கடலில் மிதந்து வந்த திரவத்தினை அருந்தியதனால் உயிரிழந்ததாக 19

## யாழ்ப்பாணத்தில் 24 பேர் உட்பட வடக்கில் 27 பேருக்கு கொரோனா

### 23 பேர் திருநெல்வேலி சந்தைத் தொகுதியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 24 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர்ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ 19

### தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தோர்

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மீது தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். 19

### அச்சுறுத்தி பணிய வைக்கும்

## அராஜக செயற்பாட்டுக்கு இடமளிக்கப் போவதில்லை

### விடுதலையின் பின் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் அச்சுறுத்திப் பணியவைக்கும் கேவலமான அராஜகச் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனத் 19

## அடிப்படை சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்

### யாழ்.மேயரின் கைது தொடர்பில் அமெரிக்கா கவலை

(கொழும்பு)

யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி மணிவண்ணனின் கைது தொடர்பில் அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான 20

## யாழ்.மாநகர பிதா கைதுக்கு ஐ.தே.க கண்டனம்

(கொழும்பு)

யாழ்.முதல்வர் கைதுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளதுடன்.

தேர்தெடுக்கப்பட்ட 20

## மணிவண்ணன் கைது மோசமான இனவாதம்

### நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் கைது மோசமான இனவாத செயற்பாடு என நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மணிவண்ணன் கைது தொடர்பில் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் இளவரசர் பிலிப் நேற்றுக் காலமானார்

(இலண்டன்)

பிரிட்டன் இளவரசர் பிலிப் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று தனது 99 வது வயதில் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் கணவரான இளவரசர் பிலிப் காலமானதாக பகிங்ஹாம்அரண்மனை அறிவித்துள்ளது.

சில காலம் சுகயீனமுற்றிருந்த இவர் தனது 99 ஆவதுவயதில்நேற்று காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில்அதிககாலம் இளவரசராக இருந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)


## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (6498)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com



## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்குமான வரன்கள் உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், அரச சார்பற்றவர்கள் உட்பட எல்லாவித மணமக்களும் எம்மிடம் உண்டு. எல்லா மணமகள், மணமகனாயினும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்,

தொடர்பு (6530)

நல்லூர் கந்தன் திருமண சேவை

வி. ஜெயந்தி 077 973 3183


# பொலிஸாருக்கு புலிப்பயம் மணிவண்ணன் கைதுக்கு இதுவே காரணம்

## மாநகர முதல்வர் விடுதலையின் பின் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த பயம் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 12 வருடங்களின் பின்னரும் இலங்கை பொலிஸாரிடையே நீடிக்கிறது. மணிவண்ணன் மீதான குற்றச்சாட்டு மற்றும் கைது அதன் பின்னணியிலேயே இடம் பெற்றுள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் போக்குவரத்துக்களை இடையூறின்றி ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மற்றும் மாநகர சபை பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் முதல்வருக்கு இருக்கிறது. அந்தச் சட்டப்படிதான் முதல்வர் மணிவண்ணன் தனது கடமையைச் செய்தார். இதில் சட்ட மீறல் எதுவும் இல்லை எனவும் சுமந்திரன் கூறினார்.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முதல்வர் மணிவண்ணன் இன்று இரவு யாழ். நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் சுமந்திரன் தலைமையில் 25 வரையான சட்டத்தரணிகள் மன்றில் மணிவண்ணன் சார்பில் ஆஜராகினர்.

இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதவான், மணிவண்ணனை 2 இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார். இதனையடுத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆண்கள் பொதுவாக இள நீல நிறத்தில் ஆடை அணிகின்றனர். அவ்வாறாயின் அவர்கள் அனைவரும் புலிகளா? கொழும்பில் வாகன தரிப்பிடத்தில் காவலர்கள் இதே சீருடை அணிந்தே கட்டணம் வசூலிக்கின்றனர் எனவும் மன்றில் எடுத்துரைத்ததாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது மாநகர சபை பணியாளர்களின் சீருடையில் விடுதலைப் புலிகளின் இலட்சினை இருந்ததா? என நீதவான் கேள்வி எழுப்பினார் எனவும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் மாநகர சபை இலட்சினையை தவறாக இணங்காண முடியாது. கொழும்பு மாநகர சபையால் இதேபோன்றதொரு ஆடையுடன் பணியாளர்களை பணிக்கமர்த்த முடியும் என்றால் அதனையே யாழ். மாநகர சபையால் ஏன் செய்ய முடியாது.

கொழும்பில் அனுமதிப்போம்; யாழ்ப்பாணத்தில் அனுமதிக்கமாட்டோம் என்றால் இந்த நாட்டில் மாவட்டத்துக்கு மாவட்டம் வெவ்வேறு சட்டங்கள் இருக்கின்றனவா? எனவும் சுமந்திரன் கேள்வி எழுப்பினார். (ம-03)

# மணிவண்ணனுக்கு முதலாவது மன்னிப்பு

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணனிற்கு முதல் மன்னிப்பு வழங்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு ஊடகம் ஒன்றில் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ( நேற்று ) ஜனாதிபதியுடன், மணிவண்ணன் விவகாரம் தொடர்பில் பேசினேன். அவருக்கு முதல் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

எனது கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய, அவருக்கு முதலாவது மன்னிப்பை வழங்குவதாக தெரிவித்தார்.

இனி இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் இதுபோல செயற்பட்டால் கடுமையான நடவடிக்கையெடுப்பதாக தெரிவித்தார்.

அவருக்கு மன்னிப்பு வழங்குவதால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படாது. சாதாரண சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, அவர் பிணையில் விடுவிக்கப்படுவார்" என குறித்த ஊடகத்திடம் தெரிவித்தார். (ம-03)

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதிவாய்ந்த தனிநபர்கள் அல்லது ஒப்பந்த நிறுவனங்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. ஆர்வமுள்ள கேள்விதாரர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் பி.ப 16.00 மணி வரை 2021.04.12ஆம் திகதியிலிருந்து 2021.04.20ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 2021.04.12 தொடக்கம் 2021.04.20ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00மணி முதல் 14.00மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 1000/=(வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
04. மீளளிக்கப்படும் வைப்புக் கட்டணம் பணமாக பிரதேச சபையில் செலுத்த வேண்டும். கட்டண விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளன.
05. கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 2021.04.20 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. 1 ஆம், 2 ஆம் இலக்க வேலைகள் பிரதேச சபைக்கு அதிக தொகையை வழங்கும் கேள்விதாரரருக்கும் 2 ஆம் இலக்க வேலையானது பிரதேச சபையிடம் குறைந்த தொகையை கோரும் கேள்விதாரருக்கும் வழங்கப்படும்.
07. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானது. பெறுகைக் குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | ஒப்பந்த காலம். | மீளளிக்கப்படும் பிணை வைப்புப் பணம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அச்சுவேலி பொதுச் சந்தை புதிய கட்டித்திற்கு பின்புறம் அமைந்துள்ள கட்டித்தின் கூரையை (மரங்கள் மற்றும் ஓடுகள்) அகற்றி எடுத்து செல்லல் (110*18) ft | NP/14/41(13)/2/Council/PI/D/01/2021 | 280,000.00 | 14 நாட்கள் | 30,000.00 | 14 நாட்கள் |
| 2 | அச்சுவேலி பொதுச் சந்தை புதிய கட்டித்திற்கு முன்புறம் அமைந்துள்ள கட்டிடத்தை அகற்றி நிலத்தை தரைமட்டம் வரைமட்டப்படுத்தி கூரைமரங்கள், ஓடுகள் மற்றும் இடிபாடுகள் என்பவற்றை எடுத்துச் செல்லல் (42*28) ft | NP/14/41(13)/2/Council/PI/D/02/2021 | 95,000.00 | 14 நாட்கள் | 10,000.00 | 14 நாட்கள் |
| 3 | அச்சுவேலி பொதுச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பழவகை விற்பனை கொட்டகையை அகற்றி வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் மீளநிர்மாணித்தல் (55*17) ft | NP/14/41(13)/2/Council/PI/D/03/2021 | - | 14 நாட்கள் | 10,000.00 | 14 நாட்கள் |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.
புத்தூர்.
2021.04.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனின் கைது

## அநாவசியமான அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தக்கூடும்

### அரசு உரியமுறையில் கையாளத் தவறிவிட்டது என்கிறார் சட்டத்தரணி சிறிகாந்தா

(யாழ்ப்பாணம்)

**உள்ளூராட்சி அமைப்பு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட பகிரங்கமான ஏற்பாடு ஒன்று தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பிரயோகித்திருப்பதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றதாக பாரதூரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பது பயங்கரமானதோர் சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன.**



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற குற்றப்புகாரின் பேரில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு விரோதமானது எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபைக்கென ஐந்து பேர் கொண்ட காவல் படையினை, புலிகள் இயக்கத்தின் காவல் துறையின் சீருடையை ஒத்த சீருடையுடன் அமைத்து செயற்படுத்தினார் என்பதே அவருக்கு எதிரான குற்றப்புகாரின் உள்ளடக்கம் ஆகும்.

யாழ்ப்பாண மாநகரின் பொது இடங்களில் குப்பை கொட்டுவதையும் வெற்றிலை துப்புவதையும் பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதையும் சட்ட விரோதச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதையும் தடுப்பதற்கு, இக்காவல் படை அமைக்கப்படுவதாக மாநகர முதல்வரால் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சூழ்நிலையிலேயே, மாநகர முதல்வர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது பிரயோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த காவல்படை பற்றிய தவறான அல்லது திரிபுபடுத்தப்பட்ட வியாக்கியானத்தின் அடிப்படையில் மாநகர முதல்வர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

ஏனெனில், காவல்படை என்ற பெயருடன், மாநகர சபை ஊழியர்களை உள்ளடக்கி அறிவிக்கப்பட்ட குறித்த காவல் படை, அதன் நோக்கங்கள், பணிகள் என்பனவற்றின் அடிப்படையில் ஓர் பொலிஸ் படையாக ஒருபோதுமே கருதப்பட முடியாதது.

நகரின் சுகாதார மேம்பாட்டினை பிரதான நோக்கமாகக் கொண்ட இந்தக் குழுவுக்கு சூட்டப்பட்டிருக்கும் 'காவல் படை' என்ற தமிழ்ப் பெயரினை அடிப்படையாக வைத்து, அதனை ஓர் பொலிஸ் படையாக அர்த்தப்படுத்துவது என்பது தவறானது.

எமது நாட்டில் 'பொலிஸ் சேவை' மற்றும் 'பொலிஸ் நிலையம்' என்பனவற்றிற்கு தமிழில் முறையே 'காவல் துறை', 'காவல் நிலையம்' என்ற சொற்கள் உத்தியேகபூர்வமாக பிரயோகிக்கப்படுவதில்லை.

'பொலிஸ்' என்ற ஆங்கிலச் சொல்லே உத்தியோகபூர்வமாக தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

காவல் துறை, காவல் நிலையம் என்ற பதங்கள் சில,பல சந்தர்ப்பங்களில் மட்டுமே ஊடகங்களால் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மேலும், குறித்த காவல் படைக்கு தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை பணியாளர்களில் எவருக்கும் வழக்கமாக பொலிஸாருக்கு வழங்கப்படும் எந்தவொரு பயிற்சி நெறியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, ஓர் குண்டாந்தடி கூட, எவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் என்பது, நீதிமன்றங்களுக்கு பதிலாக சட்டமா அதிபருக்கு மாத்திரமே உள்ளது என்பதாலும் 18 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சந்தேகநபர் ஒருவரைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருப்பதாலும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சம்பந்தப்பட்டுள்ள இந்த விவகாரம் அநாவசியமானதொரு அரசியற் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடியது என்று திட்டவட்டமாக எதிர்வு கூற முடியும்.

மாநகர முதல்வருக்கும் மாநகர சபைக்கும் எதிராக குற்றப்புகார் அளித்த நபர்களும் பாராளுமன்றத்தில் இந்த விவகாரத்தை எழுப்பி, உரத்துக் குரல் கொடுத்த எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியும் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயற்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாடியதன் மூலம் இதனை உரிய முறையில் கையாள அரசாங்கமும் தவறியுள்ளது.

இப்பொழுது கூட, நிலைமை ஒன்றும் கைமீறிப் போய்விடவில்லை.

இந்த விவகாரத்தை முழுமையாக மீள்பரிசீலனை செய்து, எந்தவொரு சட்ட மீறலும் நிகழ்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் கருதுமானால், பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாக, சாதாரண சட்டத்தின் கீழ் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## ஓய்வூதிய நிலுவை வழங்க ஆலோசனை

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்ற அரச சேவையாளர்களுக்கு இதுவரை வழங்கப்படாத ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி அந்தக் காலப்பகுதியில் ஓய்வு பெற்ற ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அரச சேவையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## புத்தாண்டில் கைதிகளை பார்வையிட முடியாது

(கொழும்பு)


இம்முறை புத்தாண்டில் சிறைக்கைதிகளுக்கு தமது உறவினர்களை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாதென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் புது வருடதினத்தில் சிறைக்கைதிகளுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, சிறைக்கைதிகள் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் தமக்கான விசேட உணவுகளை பெற்றுக்கொள்ள சிறைச்சாலை உணவகத்தில் 1000 ரூபாவை வைப்பிலிட வேண்டுமென சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (நி-4)

## பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் அஜித் மன்னப்பெரும



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினராக அஜித் மன்னப்பெரும நேற்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் ஆசனமானது வெற்றிடமாகியுள்ள நிலையிலேயே அந்த இடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலின் அடுத்த இடத்தில் உள்ள அஜித் மன்னப்பெரும இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். (நி-4)

## உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபரில்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார். கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை அடுத்த ஆண்டு ஜனவரி இறுதி வாரத்தில் நடத்தவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.(நி-4)

## சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் முதல்வர்


(வவுனியா)

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். யாழ்ப்பாணம் மாநகர சபையினால் உருவாக்கப்பட்ட காவல்படை தொடர்பில் மாநகர சபை முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணி வண்ணன் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு. வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று மதியம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வவுனியா பொதுவைத்தியசாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டு பரிசோதனைகளின் பின்னர் கண்டி வீதியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவிற்கு மீண்டும் அழைத்துச்செல்லப்பட்டார்.(நி-4-250-299)

10வருட வெற்றிகரமான சேவையில்....
கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்
புதிய பிரிவுகள் திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 10/04/2021 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக சிறப்பாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா அச்சுறுத்தலால் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒத்திவைப்பு





கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரிசில் அடுத்த மாதம் தொடங்குவதாக இருந்தது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த போட்டி ஒரு வாரம் ஒத்தி வைக்கபட்டு மே 30 ஆம் திகதி தொடங்கும் என்று பிரான்ஸ் டென்னிஸ் சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்தது. கடந்த ஆண்டு கொரோனா பரவல் காரணமாக பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி செப்டெம்பர் மாதத்திற்கு தள்ளி வைக்கப்பட்டதுடன், தினசரி 1000 ரசிகர்கள் மட்டுமே போட்டியை காண அனுமதியும் அளிக்கப்பட்டது. (4-6)




# சென்னையில் இடம் பிடித்தார் வேகப்பந்து வீச்சாளர் பெஹ்ரென்டார்ப்



ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடரில் இடம்பெற்றுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, அவுஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளரான ஜேசன் பெஹ்ரென்டார்பை, தங்கள் அணிக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

நடப்பு தொடரிலிருந்து அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான ஜோஸ் ஹேசில்வுட் விலகியதையடுத்து பெஹ்ரென்டார்ப்பை சென்னை அணி தேர்வு செய்துள்ளது.

30 வயதான இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஜேசன் பெஹ்ரெண்டார்ப், ஏழு இருபது-20 சர்வதேச போட்டிகளிலும் 5 இருபது-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

முன்னதாக கடந்த 2019 ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பிடித்திருந்த ஜேசன் பெஹ்ரென்டார்ப், அந்த அணிக்காக 5 இருபது-20 போட்டிகளில் விளையாடி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (4-6)

# தடகளப் போட்டியில் தேசிய சாதனை டில்ஷி குமாரசிங்க



தேசிய தடகள விளையாட்டு போட்டிகளில் டில்ஷி குமாரசிங்க தேசிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார். பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2.02:52 நிமிடங்களில் எல்லையை கடந்து குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் தேசிய தடகள விளையாட்டு போட்டிகளிலேயே டில்ஷி குமாரசிங்க இந்த தேசிய சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# மீண்டும் சானியா மிர்சா டென்னிஸ் ஒலிம்பிக் திட்டத்தில்



கடைசியாக 2017 ஆம் ஆண்டு இந்த திட்டத்தில் இடம் பிடித்து இருந்த இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா காயம் காரணமாக அதில் இருந்து விலகினார்.

இந்த நிலையில் மீண்டும் ஒலிம்பிக் பதக்க வீராங்கனைகளுக்கான சிறப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த தகவலை இந்திய விளையாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

டென்னிஸ் சங்கத்தின் சிறப்பு திட்டத்தின் கீழ் அவரது தர வரிசை பாதுகாக்கப்பட்டதால் ஏற்கனவே டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

இரண்டாம் ஆண்டு
நினைவு அஞ்சலி

அமரர்
சுதர்சன் சிவகணேசன்



மண் மகிழ
24.03.1979

கண் நெகிழ
04.04.2019

திதி : 11.04.2021
( ஞாயிற்றுக்கிழமை )

வல்வையூர் சிவகணேசன்
குணரகிதம் புத்திரன்
வல்லவனாம் சுதர்சனிவன் நல்லதொரு தலைமகன்

பெற்றமகன் டிஷாந்தனிடம்
பற்றுமாறாப் பாசம் வைத்தாய்— இன்று
சுற்றமெல்லாம் உன் பிரிவால் விம்மியழ ஏன்வைத்தாய்

தாய்தந்தை புலம்புவதும்
தங்கைமார் கலங்குவதும்
அய்யா நீ அறிவாயோ
அண்ணா நீ வருவாயோ

இரண்டாண்டு திதியினிலே
அய்யா நீ சாந்தி பெற
வேண்டுகின்றோம் இறைவனிடம்
சுற்றமுடன் ஊர்சேர

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் இரண்டாம் ஆண்டு திதி நாளை (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் உள்ள இல்லத்தில் சமயக் கிரியைகள் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(6531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
26 – 04 – 1964



ஆண்டவன் அடியில்
10 – 02 – 2021

அமரர் திருமதி **தவமலர் தர்மசேகரம்**(சித்ரா)

நாட்கள் அறுபது ஆனாலும்
ஆறவில்லை எம் மனது
அனைவரையும் அன்புடன் நேசித்து
அகல்விளக்காய் பிரகாசித்த நீ
இன்று அணைந்த விளக்காய் ஆனதேன்
எத்தனை காலம் சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலாது உன்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(C-1934)

பெரிய நாவலடி,
கொடிகாமம்.
077 408 0786
என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மணிவண்ணன் கைது பற்றி உள்ளூராட்சி மன்ற அமைப்புக்களுக்கு முறையீடு

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பில் சக தவிசாளர் என்ற வகையில் நேற்றுக் காலை முதற்கட்டமாக இலங்கை உள்ளூராட்சி அதிகார சபைகளின் சம்மேளனம் மற்றும் மாநகர முதல்வர் ஒன்றியம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

முதல்வர் மணிவண் ணன் கைது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரது அறிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் தலைவராக பதவிவகிக்கும் குரு நாகல் மாநகர முதல்வர் துஸார சஞ்சீவ, இவ்விடயம் தற்போது பொலிஸ் விசாரணையில் இருப்பதனாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குள் இருப்பதனாலும் தாம் உரிய சட்ட ஏற்பாடுகளுடன் தலையிடுவதாக தெரிவித்ததாகவும் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் என்ற வகையில் தாம் முதல்வருடைய கைது தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சருடன் தாமதமின்றி பேசவுள்ளதாகவும் தொவித்தார்.


மேலும், இலங்கையில் மேயர்களை உள்ளடக்கி முதல்வர்கள் ஒன்றியம் உள்ள நிலையில் அதன் தலைவராகவுள்ள மொரட்டுவை மாநகர முதல்வர் டபிள்யூ. சந்திமல் பெர்னாண் டோவுக்கும் யாழ்.மாநகர முதல்வர் விடுதலை தொடர் பில் தங்கள் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கோண்டேன்.

அதற்கு அவர் தான் ஊடகம் வாயிலாக இவ்விடயம் பற்றித் தெரிந்து கொண் டதாகவும் இவ்விடயம் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான கைது எனவும் நகர ஒழுங்குபடுத்தல்களைச் செய்வதற்கு பொலிஸாரையே முதல்வர் பயன் படுத்தியிருக்க வேண்டும் எனவும் கூறினார்.

நான் இது தங்கள் அபிப் பிராயம் சார்ந்த விடயமாக இருக்கின்ற நிலையில் தாங் கள் நாட்டில் உள்ள முதல் வர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைப்பு என்ற வகையில் தலையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலும் தெரிவித்தார். (5-4)

# மரண அறிவித்தல்

## திரு.பொன்னையா கந்தசாமி



(முன்னாள் யாழ்.பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி உப அதிபர். வட்டுக்கோட்டை தொகுதி ஆசிரியர் சங்கத் தலைவர். வடமாகாண ஆசிரியர் சங்க உப தலைவர். புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் உப தலைவர். பத்திரிகை ஆசிரியர்)

அன்னை மடியில் 20.11.1933 இறைவன் அடியில் 28.03.2021

யாழ்.ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தசாமி அவர்கள் 28.03.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா, சிதம்பரம் தம்பதியரின் ஆசை மகனும், காலஞ்சென்ற ஆலாலசுந்தரம், செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவானந்தம் (பிரித்தானியா), ஸ்ரீஜெயன் (கனடா), சிவஞானராஜா (கனடா), துஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவராணி, ஜயந்தி, சாந்தகௌரி, றமேஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவபாதம், தெட்சனாமூர்த்தி, திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி, இன்பராணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், நடராசா அவர்களின் பாசமிகு சகலனும், சுமதி, சுரேந்திரன், மாலதி, சிவேந்திரன், பத்மினி, கயல்விழி, முகுந்தன், ஸ்ரீசுதன், சுதர்சன், சுமதி, குருபரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ஓவியன், கிருஷ்னா, பவினா, லக்ஷன், கவினா, பாரியா, திவ்யன், பூவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாளை (11.04.2021) அன்று 10.30 மணிக்கு வடலியடைப்பு அரசடி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

கிரியை Get Direction
- Sunday, 11 Apr 2021 8.00 AM-10.30AM
- Chapel Ridge Funeral Home &Cremation Centre 8911 Woodbine Ave, Markham,ON L3R 5Gl, Canada

தொடர்புகளுக்கு: சிவா-மகன்(00442085012400)
ஸ்ரீ-மகன் (014169174381), ராசன்-மகன்(014168200258)
றமேஸ் -மருமகன் (016476096421), துஷா-மகள் (014166656159)

தகவல்:
குடும்பத்தினர்.

(6508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட தம்பகாமம் கிராமத்தையும் வடமராட்சி கிழக்கையும் இணைக்க இணைப்பு பாதையினை புனரமைத்துதருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாதையானது யாழ்.வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பரப்பில் சுனாமி எச்சரிக்கை விடுவிக்கப்படும் போதும் கடல் பெருக்கு எடுக்கும் போதும் குறித்த பிரதேசத்தில் உள்ள மக்களை பளை பகுதிக்கு வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட அவசர வெளியேற்று பாதையாகும்.

குறித்த பாதையினை கடந்த புரவி புயலிற்கு முன்பாக 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்திவந்தார்கள். தற்போது பாலத்திற்கு அருகில் உள்ள மண் அணைகள் உடைந்துள்ளமையால் மக்கள் சாதாரண மோட்டார்வாகனம்கூட செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர் எனவே குறித்த அவசர வெளியேற்று பாதையை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# புனரமைப்புக்காக இடம் மாறும் யாழ்.பேருந்து நிலையம்

## யாழ்.மாநகர முதல்வர்



**(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் காணி உரிமை யாழ்.மாநகர சபையிடம் இல்லை எனவும் மத்திய பேருந்து நிலையத்தை ஒப்பந்தத்தின் மூலம் பெற்று, புனரமைக்கப்பட்ட பின்னர் மீளக் கையளிக்க தயாராக இருப்பதாகவும் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்னன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளிற்கும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணனிற்குமிடையிலான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் இ.போ.ச. தொழிற்சங்கங்கள் தனியார் பேருந்து நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடமாட்டோம் என்பதை தெரிவித்தனர். இரு தரப்பினரும் ஒரே இடத்திலிருந்து சேவையில் ஈடுபடுவது தனது நிலைப்பாடல்ல என்பதையும் மணிவண்ணன் தெரிவித்தார்.

மத்திய பேருந்து நிலையத்தை புனரமைப்பதற்காகவே இ.போ.சவினரை வேறிடத்தில் சேவையில் ஈடுபடக் கோருவதாகவும் மத்திய பேருந்து நிலையத்தை பெற்று புனரமைப்பின் பின் மீள கையளிப்பது தொடர்பில் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

மத்திய பேருந்து நிலையம் புனரமைக்கப்பட்டு, இ.போ.சவிடம் மீள கையளிக்கப்படும் வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது. யாழ்.மாநகரசபை இதற்கு நிதியளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)

## பொருத்தப்பட்டது வீதி விளக்கு

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் கொடிகாமச் சந்தியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச மக்கள், கொடிகாமம் வர்த்தக சங்கத்தினர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியோர் இணைந்து கொடிகாமச் சந்தியில் வீதிச் சமிக்ஞை ஒளிவிளக்கு பொருத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக குறித்த சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

குறித்த சமிக்ஞை விளக்கு 90 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)




## கழிவகற்றல் முகாமைத்துவமும் மக்களின் பொறுப்பற்ற செயலும்

(சாவகச்சேரி)

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை பாரிய சவால்களை எதிர் கொண்டு வருவதாக பிரதேச சபை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது. அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதேச சபையினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப பணிமனைக்கு உட்பட்ட வேம்பிராய் மற்றும் குருவிக்காட்டு சூழல்களில் கழிவு முகாமைத்துவத்தினைப் பேண பிரதேச சபை பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகிறது. இன்று சிரமதானம் செய்து குப்பைகளை அகற்றினால்நாளை அதே இடத்தில் இருந்ததை விட அதிக குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. சிரமதானம் செய்தோம் என்பதற்கான அடையாளத்தை கூட மறுதினம் காண முடிவதில்லை. பொறுப்பற்ற விதத்தில் வேறு பிரதேசங்களில் இருந்து கூட உழவியந்திரங்களில் கொண்டு வந்து பலதரப்பட்ட குப்பைகளும் கொட்டப்படுகின்றன.

இது தொடர்பாக சுற்றுச்சூழல் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியும் இன்றுவரை முன்னேற்றம் எதுவும் இல்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.(5-4-30

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாகத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சங்கானை செங்கட்படை மகாதேவ பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் கிரியா திலகம் சிவஸ்ரீ கை.கிருஷ்ணகுமாமரக் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## பொதுக்கூட்டத்தை கூட்டுமாறு விவசாயிகள் வேண்டுகோள்

(வரணி)

மீசாலை கமநல சேவை பிரிவிற்குட்பட்ட மாசேரி வரணி கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் மூன்று வருடங்களுக்கு மேலாக நடத்தப்படவில்லையென விவசாயிகளும் அங்கத்தவர்களும் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் இதன் காரணமாக தமது கருத்துக்களை சுட்டிக்காட்டுவதற்கு சந்தர்ப்பம் இல்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த வருடத்திற்கான பொதுக்கூட்டத்தினை கூட்டி புதிய நிர்வாகத் தெரிவையும் மேற்கொள்ள கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என விவசாயிகளும் அங்கத்தவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.(5-4-103)

## சந்தை விதிமுறைகளை கடைப்பிடிக்காத வியாபாரிகளும் பொதுமக்களும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் நகர சபையின் சட்ட நடைமுறைகளை எவரும்கடைப் பிடிப்பதில்லையென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச்சந்தையில் வாகன தரிப்பிடங்கள் இருந்தும் உரிய இடங்களில் வர்த்தகர்களோ, வாடிக்கையாளர்களோ வாகனங்களை நிறுத்துவதில்லை. அத்துடன் மரக்கறி வியாபாரிக்கு மிக அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு பொருட்களை கொள்வனவு செய்வதனையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன் நடைபாதையில் வர்த்தகர்கள் பொருட்களை வைத்து இடையூறு ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகிறது. சாவகச்சேரி பொதுச்சந்தையில் உரிய இடவசதி காணப்படுகின்ற போதிலும் அதனை உரிய விதத்தில் பயன்படுத்தத் தவறி வருகிறோம். நடைபாதையில் பொருட்களை வைத்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட இடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாகனங்களை நிறுத்தும் செயற்பாட்டினை நகர சபையின் சந்தை உத்தியோகத்தர்கள் கண்காணிக்க வேண்டும். கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் பொலிஸாரின் உதவியைப் பெற்றுக் கட்டுப்படுத்த வேண்டும்.

சந்தை வளாகத்தில் உள்ள பொது மலசலகூடம் பாவனைக்கு உகந்த முறையில் இல்லை. இவை தொடர்பாக நகரசபை நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து நகரசபையின் கட்டுப்பாட்டிற்குள் சந்தையை வைத்திருக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)



காங்கேசன்துறையில் அமைந்துள்ள நல்லிணக்க மையத்தில் விது நம்பிக்கை நிறுவனத்தின் பூரண அனுசரணையுடனும் வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கமும் இராணுவத்தினரும் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட விசேட தமிழ் சைகைமொழிப் பாடநெறியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## வருடப்பிறப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நள்ளிரவு 12 மணிக்கு அபிஷேகமும் வருஷ பிறப்பு நேரமாகிய 14 ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை 1.39 மணிக்கு மூலமூர்த்தி விநாயகருக்கு விசேட அலங்கார பூஜையும் வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதலும் இடம்பெறும். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரங்களை மாநகர சபைகள் கையில் எடுக்க முடியாது

## என்கிறார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரங்களை எக்காரணம் கொண்டும் மாநகர சபைகள் கையில் எடுக்க இடமளிக்க முடியாது. நகர மேயருக்கும் இது பொருந்தும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார். நாட்டின் சட்டத்தை முறை தவறி செயற்படுத்த அரசாங்கம் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

யாழ்.மாநகரசபை மேயர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை தெரிவிக்கும் போதே அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் ஆக்கிரமிப்பு காலத்தில் வடக்கில் எவ்வாறு பொலிஸார் செயற்பட்டனர், நீதிமன்றங்கள் எவ்வாறு இயங்கியன என்பதை நாம் பார்த்தோம். எனவே பொலிஸ் அதிகாரங்களை எக்காரணம் கொண்டும் மாநகரங்கள் பயன்படுத்த இடமளிக்க முடியாது. நகர மேயருக்கும் இது பொருந்தும். இதுதான் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும் என ஜோன்ஸ்டன் தெரிவித்தார். (நி-4)

# ரஞ்சனின் தண்டனையை ஏற்க முடியாது-பொன்சேகா





(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பிலான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கும் எந்தவொரு சட்ட விதிகளும் நாட்டில் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான உலகளாவிய சூழ்நிலைகள் வேறுபட்டவையாயாகும்.

இந்தியாவில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சட்டத்தரணி ஒருவருக்கு, இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

எனினும் அவர் அபராதம் செலுத்த மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து அவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் இலங்கையில் அவ்வாறான விடயத்துக்கு தண்டனை வழங்குவது தொடர்பாக எந்தவொரு சட்டமும் இல்லை. அவ்வாறிருக்க ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமையை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மணிவண்ணனின் கைது அரசாங்கத்தின் எதேச்சதிகாரச் செயற்பாடே-மட்டு முதல்வர்

(மட்டக்களப்பு)

யாழ்.மாநகர சபையின் முதல்வர் மணிவண்ணனின் கைதானது அரசாங்கத்தின் எதேச்சதிகாரச் செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளதாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகையில், "யாழ். மாநகர முதல்வர் கைதானது தமிழ் மக்களுக்கு ஆபத்தான சூழ்நிலையொன்று உருவாகிக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றது.

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாநகர காவல் அணியை உருவாக்க முடியும். மட்டக்களப்பு மாநகர சபையில் 2018 ஆம் ஆண்டு இவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு பொலிஸ் திணைக்களம் ஊடாகப் பத்துப் பேர் கொண்ட காவல் அணியொன்று கோரப்பட்டிருந்தது. அது தொடர்பான அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை.

யாழ்.மாநகர சபையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீருடையானது பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒன்றே" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்று வந்த யாழ்.இணக்கசபை மறு அறிவித்தல் வரை இயங்க மாட்டாது என தவிசாளர் திருமதி கௌரி முரளிதரன் அறிவித்துள்ளார். (5-4-106)


## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த RC மதத்தைச் சேர்ந்த சூரிய செவ்வாய் 2 1/2 கிரக பாவம் உள்ள மண மகனிற்கு 18ற்கு குறைந்த கிரக பாவமுடைய சூரியச் செவ்வாயுள்ள மணமகள் தேவை.

தரகரும் தொடர்பு கொள்ளலாம்.

(6522)

077 417 5675

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 6 சூரி 5 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில் பொறியியலாளர் கணனி விஞ்ஞானம், தொழில் - Computer Engineer
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: B/11737

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: 28 செவ் 10 சூரி 9 இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், உள்நாடு மட்டும், நெல்லியடி கரவெட்டி விரும்பத்தக்கது
தொ.இ: B/11738

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 19 செவ் 10 சூரி 12 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, H.N.D, வியாபாரம் தனியார் மொத்த வியாபாரி
எதிர்பார்ப்பு: படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11741

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 22 1/2 செவ் 3 சூரி 4 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, எக்கவுண்டன் தனியார் கம்பனி
எதிர்பார்ப்பு: படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11742

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 28 செவ் 7 சூரி 8 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, C.B.F, D.B.F, BBM, வங்கி உத்தியோகத்தர், அரச
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரி BSC, உள்நாடு மட்டும்
தொ.இ: G/3101

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 84 செவ், சூரி 8 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: உள்நாடு அரச உத்தியோகம், வெளிநாடு ஆயின் (சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன்)
தொ.இ: G/3138

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 64 செவ் 7 சூரி 6 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC,MSC, வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உள்நாடு பட்டதாரி, வெளிநாடும்
தொ.இ: G/3140

பிறப்பு: 1976 கிறிஸ்தவம்
உயரம்: 5'5
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: கணவன் இறந்துவிட்டார். வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்
தொ.இ: G/3169

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## புதிய அரசியலமைப்பில்

சைவ சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்க
மதமாற்றத் தடையை உள்ளடக்குக
மாடுகளை வெட்டத் தடையை உள்ளடக்குக



සෛවාගමට ප්‍රමුඛතාවක් දෙන්න.
ආගම් වෙනස් කිරීම තහනම් කරන්න.
ගව ඝාතයට එරෙහිව තහනම් නියෝගයක් පනවන්න.



## தவத்திரு விபுலானந்த அடிகளார்

129 ஆவது பிறந்த நாள், பங்குனி பூரட்டாதி (10.04.2021)

இலங்கையின் 12 மாவட்டங்களில் 16
திருக்கோயில்களில் தவமிருக்கிறோம் –
உண்ணா நோன்பு நோற்கிறோம் – வழிபடுகிறோம்
மூன்று கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.
ஆதரிப்பீர்.

மறவன்புலவு க.சச்சிதானந்தன்

+ 94 77 275 4864

(6510)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப் பகலில் திருட்டு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வர்த்தக நிலையமொன்றிக்கு சென்ற நபரொருவர் வர்த்தக நிலைய உரிமையாளரிடம் பொருட்களைக் கோரியுள்ளார். வர்த்தக நிலைய உரிமையாளர் பொருட்களை எடுக்க சென்ற சமயத்தில் வர்த்தக நிலைய காசாளர் மேசையினைத் திறந்து அதிலிருந்த பணத்தினை களவாடி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# சட்டவிரோத மணல் அகழ்வு தற்போது கட்டுப்பாட்டில்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினரால் காவலரண்கள் அமைக்கப்பட்டு வீதிச் சோதனைகளும் இடம்பெற்று வருவதன் மூலம் சட்டவிரோத மணல் அகழ்வுப் பல பகுதிகளால் கட்டுப்பாட்டில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆயின் பல்வேறு வகையான குற்றச் செயல்கள் முற்றுமுழுதாக தடை செய்ய முடியும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (5-4-316)

# வனஜீவராசிகள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்பத்துங்கள் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் வவுனிக்குளத்தின் கீழான கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

1957 ஆம் ஆண்டு வவுனிக்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது.

அம்மக்கள் இன்றுவரை விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். வவுனிக்குளத்தினை நீர்ப்பாசனத் திணைக்களம் சிறப்பாக நிர்வகித்து வருகின்றது.

ஆனால் அண்மைக் காலமாக வனஜீவராசிகள் திணைக்களம் குளத்தின் சூழலில் விளம்பரப் பலகைகளை நாட்டி குளத்தினைத் தாங்கள் பராமரிப்பின் கீழ் உள்ளது போல் செயற்பட்டு வருகின்றனர்.

வவுனிக்குளத்தின் நிர்வாகத்தினை மேற்கொண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினை தவிர வேறு எந்த திணைக்களங்களும் குளத்தின் மீதோ அல்லது விவசாயிகள் மீதோ அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் இச்செயற்பாட்டை மாவட்டச் செயலகம் கட்டுப்படுத்துவதுடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தினைத் தவிர வேறு எந்த திணைக்களங்களும் குளத்தின் நிர்வாகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது என வவுனிக்குளத்தின் கீழான கமக்கார அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் வ்வுனிககுளத்தின் மீதான செயற்பாடுகள் தொடர்பாகத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் வவுனிக்குளத்தின் கீழான கமக்கார அமைப்புகள் மாவட்டச் செயலாளரிடம் மேற்படி கோரிக்கையினை முன் வைத்துள்ளனர். (5-4-350)



கிளிநொச்சி டிப்போ சந்தி பசுமைப் பூங்காவில் நடைபெற்ற புத்தாண்டு சந்தையை மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார். (படம்:- யதுபாஸ்கரன்)

# விதை நெல் உற்பத்தியிலும் விவசாயிகள் ஈடுபட வேண்டும்

## விவசாயத் திணைக்களம் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 180 ஏக்கரில் நெல் நாற்று நடுகையினை முன்னெடுக்க உள்ளதாக முல்லைத்தீவு விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

துணுக்காய், மாந்தை கிழக்கு பகுதியில் 100 ஏக்கரிலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 80 ஏக்கரிலும் நாற்று நடுகை மூலம் நெற்செய்கை முன்னெடுக்கப்பட உள்ளது.

நாற்று நடுகைக்காக விவசாயத் திணைக்களத்திடம் 13 இயந்திரங்கள் காணப்படுவதாகவும் நாற்று நடுகை மூலம் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுகின்ற போது இயந்திரங்கள் மூலம் களைகளை கட்டுப்படுத்தலாம்.

இதேவேளை மாவட்டத்தில் 200 ஏக்கரில் விதை நெல் உற்பத்தியிலும் விவசாயத் திணைக்களம் ஈடுபட உள்ளது.

விவசாயிகளும் மாவட்டத்தில் நிலவுகின்ற விதை நெல் நெருக்கடியினைக் கருத்திற்கொண்டு விதை நெல் உற்பத்தியிலும் ஈடுபட வேண்டும் எனவும் விவசாயத் திணைக்களம் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (5-4-350)




# வவுனியாவில் தாக்குதல் நடத்திய குழு யாழில் கைது

(குருமன்காடு)

யாழில் இருந்து வெள்ளை வானில் வாள்களுடன் சென்ற குழு ஒன்று வவுனியாவில் இரு வீடுகளுக்குள் புகுந்து உடைமைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் வானுடன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழிலிருந்து சென்ற குழு ஒன்று வவுனியாவில் இரு வீடுகளில் தாக்குதல் மேற்கொண்டது. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா பொலிஸார் தாக்குதல் நடத்த வந்த குழுவினர் பயன்படுத்திய வெள்ளை நிற வாகனத்தையும் ஒரு பெண் உட்பட இருவரை நேற்று முன்தினம் யாழில் வைத்து கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (5-4-250)

# ஒரே கட்டடத் தொகுதியில் மீன் மரக்கறிச் சந்தைகள்

(குருமன்காடு)

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட குழுமாட்டு சந்தியில் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக வறுமை மட்டத்தை குறைத்தல் (2017-2020) எனும் கருப்பொருளின் கீழ் மரக்கறி மற்றும் மீன் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையம், ஐக்கிய இராஜ்ஜியத்தின் சர்வதேச அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இக்கட்டடம் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

இது வரையிலான காலமும் வீதியோரங்களில் சிறிய கொட்டைகையில் மீன் வியாபாரம், மரக்கறிவியாபாரம் மேற்கொண்ட வியாபாரிகளுக்கும் இவ் கட்டடம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுடன் பொதுமக்களும் ஒரே இடத்தில் பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ளது. (5-4-250)

# ஆவணங்கள் உள்ளவர்கள் காணிகளைத் துப்புரவு செய்ய முடியும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலங்களற்ற குடும்பங்களுக்கு வயல் நிலங்களை வழங்குமாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் எம்.தயானந்தன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வவுனிக்குளத்திற்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலங்களுக்கான ஆவணங்களுடன் பல குடும்பங்கள் உள்ளன. அவர்கள் தங்களுடைய காணிகளை துப்பரவு செய்வதற்கு மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலத்திற்கான நிலம் உள்ளது.

பல குடும்பங்கள் வயல் காணிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. இக்குடும்பங்களைத் தெரிவு செய்து குறைந்தது ஒரு ஏக்கர்வயல் நிலமாவது வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தினை இக்கூட்டத்தில் எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளினால் வயல் நிலங்களுக்கு ஆவணங்கள் உள்ளவர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்ய முடியும். வயல் நிலமற்றவர்களுக்கு காணி வழங்குவது தொடர்பாக மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

10.04.2021
பங்குனி 28, சனிக்கிழமை
சதுர்த்தசி முழுவதும்
பூரட்டாதி முற்பகல் 8.03 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
இராகுகாலம் 7.06-10.36 மணிவரை
சந்திராஷ்டமம்-மகம்

வளவன்



**மேஷம்**

தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பயணத்தால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**ரிஷபம்**

செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், இனிய செய்திள் இல்லம் தேடி வரலாம், போசன சுகமுண்டு.



**மிதுனம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.



**கடகம்**

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.



**சிம்மம்**

வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம்.



**கன்னி**

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**துலாம்**

நல்லவர்களின் நட்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.



**விருச்சிகம்**

தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.



**தனுசு**

பெற்றோர் மீது பிரியம் கூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.



**மகரம்**

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.



**கும்பம்**

கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு



**மீனம்**

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, போசன சுகமுண்டு.

தவறுகளைக் கண்டிக்கும் தந்தையே குழந்தைகளை நேசிப்பார்

# 27 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த கல்வி அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவக பாடசாலைகள் உட்பட மாவட்டத்தில் 27 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் முன்வைத்த கோரிக்கை கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது .

இதற்கான கலந்துரையாடல் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அங்கஜன் இராமநாதனுக்கும் இடையில் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் முன்வைக்கப்பட்ட பாடசாலைகளான: நெடுந்தீவு மகா வித்தியாலயம், வேலணை மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை சென்.அந்தோனியார் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, உடுத்துறை மகா வித்தயாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்து கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி , வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்து கல்லூரி, விக்டோறியா கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி என்பன முன்வைக்கப்பட்டன.

இப்பாடசாலைகள் இவ்வருடம் 2021 ஏப்ரல் மாதம் நிறைவடைய முன்னர் 2 கட்டங்களை இணைத்து மொத்தமாக 27 பாடசாலைகளையும் தேசிய பாடசாலைகளாக ஆக்குவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு யாழ்.மாவட்டத்தின் அதிகஷ்டப்பட்ட பிரதேசங்களான தீவகம் மற்றும் மருதங்கேணி பகுதிகளின் எதிர்காலக் கல்வியை மேம்படுத்தும் முகமாக விசேட திட்டத்தின் கீழ் தீவகத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலயம், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி ஆகிய 3 பாடசாலைகளும் மருதங்கேணியில் அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையையும் விசேட பாடசாலை தரத்திற்கு மாற்றப்படவுள்ளன.

இந்த சந்திப்பில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அங்கஜன் இராமநாதன், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், கல்வி அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்வி பணிப்பாளர், வலய கல்வி பணிப்பாளர்களும் இணையவழி ஊடாக கலந்து கொண்டனர். (5-4)

# மீண்டுமொரு தாக்குதலுக்கு திட்டமா?
## சாணக்கியனிடம் வாக்குமூலம் பெறப்பட வேண்டும்
## சீண்டும் இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இடம் பெற்ற, சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் 2021 ஆம் ஆண்டு மற்றுமொரு தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடுகின்றதா? என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தமை தொடர்பிலேயே வாக்குமூலம் பெறப்பட வேண்டும்.

இது பாரதூரமானதொரு கருத்தாகும். அன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்க முடியாத குழுவினர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் முன்னிலையானவர்கள், அவர்களது அரசியல் நிலைப்பாடுகளுக்காக முன்னிலையானவர்கள், வேறாக ஈழத்தை கோரியவர்கள், இன்று 2021 ஆம் ஆண்டு அரசாங்கம் மற்றுமொரு தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடுகின்றதா? என கேள்வி எழுப்புகின்றனர்.

அன்று வேண்டுமென்றே மிலேச்சத்தனமான உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்கத் தவறியவர்கள், தற்போது மீண்டும் தாக்குதலை நடத்த முயற்சிக்கின்றார்களா? என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-4)

## 24 மணித்தியாலத்தில் 13 பேர் பலி

(கொழும்பு)

வாகன விபத்துகளினால் நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பண்டிகை காலத்திற்கு இன்னமும் சில தினங்களே எஞ்சியுள்ள நிலையில் வாகன விபத்துகள் மீண்டும் அதிகரித்து வருகிறது என அவர் தெரிவித்தார். (நி-4)

## நியூ டயமன்ட் கப்பல் விவகாரம்
# 3.4 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரும் சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கை கடல்சார் சூழலுக்கு ஏற்பட்ட நட்டத்துக்காக நியூ டயமன்ட் கப்பல் உரிமையாளர்களிடம் இழப்பீடு கோரி சட்டமா அதிபர் ஆவணங்களை அனுப்பியுள்ளார்.


சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 2020 செப்டெம்பரில் இலங்கையின் தென்கிழக்கு கடற்பகுதியில் எம்.ரி.நியூ டயமன்ட் என்ற எண்ணெய்க் கப்பல் தீப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மூன்று மீன்கள்



ஒரு குளத்தில் மூன்று மீன்கள் வாழ்ந்து வந்தன. அவைகளில் முதலாவது, புத்திசாலியான மீன். இரண்டாவது, அரைகுறை புத்திசாலியான மீன். மூன்றாவது, முட்டாள் மீனாகும்.

உலகிலுள்ள மற்றெல்லா மீன்களைப் போல்தான் அக்குளத்திலுள்ள மீன்களும் வாழ்ந்து வந்தன. மற்ற மீன்களுக்கு நேருகின்ற அனைத்து விடயங்களும் அக்குளத்து மீன்களுக்கும் நேர்ந்து வந்தன.

ஒருநாள் குளத்து மீன்களின் வாழ்க்கையிலும், ஒரு குறுக்கீடு மனித ரூபத்தில் வந்தது. வந்த மனிதனின் கைகளில் வலை இருந்தது.

வலையைக் கவனித்துவிட்ட புத்திசாலியான மீனுக்கு தான் பார்த்த, கேட்ட அனுபவங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவ் அனுபவங்களைக் கொண்டு சாமர்த்தியமாக செயலில் இறங்கலாம் என யோசனை செய்தது அம் மீன்.

இக்குளத்தில் மனிதக் கண்ணில் படாமல் மறைவாக ஒளிந்து கொள்வதற்கு நிறைய பொந்துகள் இருக்கின்றன. ஆகையால் செத்தது போல் நடிக்கலாம் எனத் திட்டம் போட்டது அந்த புத்திசாலியான மீன்.

தனது சக்தியெல்லாவற்றையும் திரட்டி, குளத்தை விட்டு எம்பிக் குதித்து அம் மீனவனின் காலடியில் போய் விழுந்தது புத்திசாலியான மீன். தனது காலடியில் விழுந்த மீனை பார்த்து ஆச்சரியமாகப் போய் விட்டது மீனவனுக்கு.

ஆனால், அம் மீன் மூச்சை இறுக்கிப் பிடித்து துடிப்பில்லாமல் கிடந்ததால், மீன் இறந்து போய்விட்டது என நினைத்து அதைக் குளத்துக்குள் தூக்கியெறிந்துவிட்டான் மீனவன்.


நீரில் விழுந்த அம்மீன் கரையோரமாக இருந்த ஒரு பொந்திற்குள் போய்ப் புகுந்து கொண்டது.

இரண்டாவது மீனிற்கு, நடந்த விடயங்கள் எதுவும் தெரியாது. ஆகவே இரண்டாவது மீன், புத்திசாலியான மீன் இருக்குமிடத்திற்கு நீந்திப் போய் நடந்த விடயங்களைக் கேட்டது.

"ரொம்ப சுலபம். நான் இறந்துவிட்டது போல் நடித்தேன். அவன் என்னைத் தூக்கி, குளத்தில் மீண்டும் போட்டுவிட்டான்" என்றது புத்திசாலி மீன்.

அதைக் கேட்டவுடன், இரண்டாவது மீன் துள்ளிக் குதித்து தண்ணீரை விட்டு வெளியே வந்து மீனவன் காலடியில் விழுந்தது. (தொடரும்)

# மகாபாரதம்




**பாண்டவர் வனவாசம்**

துரியோதனன் இம்முறை ஒரு சூழ்ச்சி செய்தான். "சூதாட்டத்தில் தோற்பவர், துறவு பூண்டு 12 ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும். ஒரு வருடம் அஞ்ஞாத வாசம் (மறைந்து வாழுதல்) செய்ய வேண்டும்" என்றும் "இந் நிபந்தனையை நிறைவேற்றிய பின்னரே தோற்றவர்க்கு நாடு திருப்பி அளிக்கப்படும்" என்றும், நிபந்தனை தவறினால் மீண்டும் 13 ஆண்டுகள் இதே முறையில் செல்ல வேண்டும்" என்றும் கூறினான்.

இம்முறையும் சகுனி வெல்ல நாடு, நகரங்களை இழந்த பாண்டவர்கள் பீஷ்மர் முதலியவர்களிடம் விடை பெற்று காடு செல்ல தீர்மானித்தனர். வயதாகி விட்டதால் குந்தி விதுரர் வீட்டில் தங்கினாள்.

பாண்டவர் வனவாச செய்தி அறிந்து அஸ்தினாபுர மக்கள் அழுது துடித்தனர். அவர்களுடன் காடு செல்லவும் முயன்றனர். தருமர் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு கிளம்பினார்.

கானகத்தில் அவர்களைக் காண ரிஷிகளும், மற்றவர்களும் வந்த வண்ணம் இருந்தனர். அவர்களுக்கு எப்படி உணவு அளிப்பது என அறியா தருமர் சூரியனை நோக்கி முறையிட்டார். உடன் அட்சய பாத்திரம் கிடைத்தது.

அதில் சிறிதளவு உணவை இட்டாலும் பெருகி எத்தனை பேர் வந்தாலும் அனைவருக்கும் உணவு கிடைத்தது. எல்லோரும் உணவு அருந்திய பின் பாஞ்சாலி உணவு உண்பாள். பிறகு பாத்திரம் காலியாகி விடும். அன்று உணவு பெறும் சக்தி அவ்வளவுதான். மீண்டும் மறுநாள்தான். இப்படியே வனவாசம் கழிய அருள் கிடைத்தது.

பாண்டவர்கள் காடு சென்றதும் திருதராட்டினன் மனம் சஞ்சலம் அடைந்தது. குற்ற உணர்வு அவனை வருத்தியது. விதுரரை அழைத்து மக்கள் மனநிலை எப்படி என வினவினார்.

"மக்கள்" துயரால் வாடுகின்றனர் என்றும் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதலே சிறந்தது என்றும் இல்லையேல் துரியோதனன் முதலானோர் அழிந்து போவார்கள்" என்றும் விதுரர் கூற, அதை திருதராட்டிரன் ஏற்காது விதுரர் மீது சீறிப்பாய்ந்தான்.

என்னால் நாட்டை விட்டு துரத்தப்பட்ட பாண்டவர்களிடத்தில் தான் உனது உள்ளம் இருக்கிறது நீயும் அவர்களிடத்தில் சென்று தங்கு. இனி அரண்மனையில் இருக்கவேண்டாம்" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் கைது செய்யப்பட்டமை அடக்குமுறையின் வெளிப்பாடாகும்

(கொழும்பு)

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்தமை சட்டரீதியாகவோ அல்லது தார்மீக ரீதியாகவோ நியாயப்படுத்த முடியாதென்று. பணியாளருக்கு வழங்கப்பட்ட சீருடைகளின் நிறங்களை வைத்து அவர் புலிகளை மீளுருவாக்கம் செய்கிறார் எனக் குற்றம் சுமத்துவது கேலிக்குரியது என்பதற்கப்பால் இலங்கை ஆட்சியாளரின் எதேச்சதிகாரத்தையும் தமிழினத்தின் மீதான அவர்களின் குரூர உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கிறது என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் தெரிவித்தார்.



புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதற்காக அவ்வாறான நிற உடைகளைப் பயன்படுத்துவோர் பயங்கரவாதத்துக்குத் துணைபோவோர் என முடிவு செய்வது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும். உண்மையில் முதல்வரின் கைது அரச அடக்குமுறையின் வெளிப்பாடு. பாசிசத்தின் மறுவடிவம். நாட்டின் வருங்கால ஆட்சி வடிவத்துக்கான ஓர் எதிர்வு கூறல். இனவதத்தை விதைத்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர் சரிந்து போகும் தமக்கான மக்கள் செல்வாக்கை தாக்கி நிறுத்த எடுக்கும் தொடர் முயற்சிகளில் இதுவும் ஒன்று. இது தனியே மணிவண்ணனுடன் நின்று விடப் போவதில்லை. எங்கள் ஒவ்வொருவருக்குமான எச்சரிக்கை. இதனை நாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மணியின் கைதுக்கு மனோ கண்டனம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடுமையாகக் கண்டிக்கின்றது என அந்தக் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மணிவண்ணனின் கைதுக்குப் பதில் அவர் மீது குற்றஞ் சாட்டி, எழுத்து மூல விளக்கம் கோரும் சட்டபூர்வ நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் எடுத்து நிதானமாக நடந்து கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கைது அரசை திருப்தியடையச் செய்திருக்கின்றது என நான் அறிகின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

# யாழ்.மாநகர முதல்வரை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## கனேடிய எம்.பி.கண்டனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத குற்றப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டமைக்கு கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் ஹரி அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளின் தன்னிச்சையான கைதுகள் மற்றும் துன்புறுத்தல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் ஹரி ஆனந்த சங்கரி வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# இன, அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மிக மோசமாகியுள்ளது த.தே.ம.முன்னணி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டித்துள்ளது.

அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அரசின் பாசிச ஆட்சியை நோக்கிய நகர்வுகள் உச்சத்தை எட்டியுள்ளன. இன மற்றும் அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மோசமாகியுள்ளது எனவும் கஜேந்திரகு

# தமிழர்களுக்கு எதிரான அநியாயங்கள் ஏற்க முடியாதவை

## ரொரண்டோ மேயர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் யாழ்.மாநகர மேயர் வி. மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டமையைகனடா - ரொரண்டோ நகர மேயர் ஜோன் டோரி கண்டித்துள்ளார்.

யாழ்.மாநகர சபை மேயர் கைது செய்யப்பட்டமைக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

தமிழர்களுக்கு எதிராக தொடரும் இவ்வாறான அநியாயங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இதற்கு அனைவரும் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும். தமிழ் சமூகத்துக்கு தங்களின் ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் எனவும் ரொரண்டோ மேயர் ஜோன் டோரி தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (நி-4)

# கைது செய்யப்பட்ட முதல்வர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் நிர்வாக திறமையை சகித்துக்கொள்ள முடியாத சிங்கள அரசு, யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம்மணிவண்ணனை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்.மாநகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கிய காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

இந்த அரசு தமிழர்கள் எந்த வகையிலும் முன்னேறி விடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. சாதாரண சீருடையைப் பார்த்து அரசாங்கம் அச்சம் கொள்வது எதற்காக என்று எமக்குத் தெரியவில்லை.

எனவே, கைது செய்யப்பட்ட யாழ்.மாநகர முதல்வரை உடனடியாக விடுதலை செய்வதோடு யாழ்.நகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாநகர காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்த வேளையில் கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார். (நி-4)





# தமிழ் மக்களை எப்போதும் பீதியில் வைத்திருப்பதற்கான முயற்சியே இதுவாகும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப்பீதியில் வைத்திருப்பதையே விரும்புகின்றது. இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர்சட்டத்தரணி மணிவண்ணன் கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணன் விசாரணையின் நிமித்தம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தத் திட்டமிட்ட கைது நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். யாழ்ப்பாணம் மாநகர சபையும் ஏனைய மாநகர சபைகளைப் போன்று மாநகர சபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முனைகின்றபோது இவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசு இந்தக் கேவலமான நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–307

# பாலைவன வெட்டுக்கிளிகளை அழிக்கும் உயிர்ப்பீடை நாசினிகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

ஆபிரிக்க தேசத்தில் மீண்டும் படையெடுக்கின்றன பாலைவனத்து வெட்டுக்கிளிகள்! பாலைவனத்தில் கோடிக்கணக்கில் ஒரு செறிவான பரந்துபட்ட மழைமேகம் போல படையெடுக்கும் இவ்வாறான பூச்சிப்பீடையினத்தைச் சேர்ந்த சிறிய உணர்கொம்புள்ள வெட்டுக்கிளிகள் (Short horned Grass hoppers) ஆபிரிக்க தேசத்தில் முதலில் அதிகளவிலான சேதத்தை ஏற்படுத்திய பின்னர் வளைகுடா பகுதியூடாக நகர்ந்து ஆசிய நாடுகளின் பரப்பிற்குள் வந்தேறியிருக்கின்றன. பாகிஸ்தான் தேசத்தில் இதனது சேதம் முழுமையாக உணரப்பட்டுள்ள நிலையில் இந்தியாவிலும் இவற்றினது தாக்கம் அதி தீவிரமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகளவில் வெட்டுக்கிளிகள் பயிர்களை அழிப்பதில் மிக மும்முரமாக ஈடுபடுவதனை அறிய முடிகின்றது.

குறிப்பாக கிழக்கு ஆபிரிக்க நாடுகளான கென்யா, எதியோப்பியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளை முற்றுகையிட்ட இவ் வெட்டுக்கிளிகள் அந்த நாடுகளில் உற்பத்தியாகும் பயிர்களில் பாரிய சேதத்தை உண்டு பண்ணியுள்ளன. தாவரங்களின் பச்சையிலைப்பகுதிகளை முழுவதுமாக தின்று ஏப்பமிடுகின்றன. எமது நாட்டில் வெட்டுக்கிளிகள் பயிர்ச்செய்கையின் போது அவ்வப்போது சிறியளவிலான சேதங்களை உண்டுபண்ணுவதுண்டு. ஆனால் பாலைவனத்து வெட்டுக்கிளிகள் பாரியளவில் பல்கிப்பெருகி இந்திய தேசத்திற்குள் வந்திருக்கும் பல மில்லியன் கணக்கிலான வெட்டுக்கிளிகள் எமக்கு சவாலாகவே காணப்படுகின்றன. இதனால் நாம் முன்கூட்டியே அவதானமாக இருக்க எமது விவசாயப் பெருமக்களுக்கு அறிவூட்டல் அவசியமாகும்.

ஒரு சதுர கிலோமீற்றர் அளவில் தொகையாக வரும் வெட்டுக்கிளிகள் ஒருநாளில் 36,000 பேர் உண்ணக்கூடிய உணவை தின்று விடுமாம் என்றால் அவற்றின் வேகத்தைப் பாருங்களேன். இப்படியே போனால் நிலைமை மிக மோசமாகத்தான் இருக்கும் என்கின்றார்கள் விஞ்ஞானிகள். இவற்றினது இனப்பெருக்கத்தின் வீரியத்தை கணக்கிட்டால் பூமிப்பந்திலுள்ள தாவரங்களின் இருபது சதவீதத்தை விரைந்து உண்ணுமளவுக்கு இருக்கும் என பூச்சியியலாளர்கள் கருதுகின்றார்கள். அத்துடன் இவ்வாறு உண்ணும் போது அது இப்பூமியிலுள்ள மக்கள் தொகையின் பத்தில் ஒரு பகுதியினருக்கு உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்திவிடுவதனால் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடும் என்கின்றார்கள் புலமையாளர்கள்.

ஒரு பக்கம் கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து விடுபடமுடியாமல் இன்னமும் நாம் போராடிக்கொண்டு எங்கே தொற்றிவிடுமோ என்ற பயப்பீதியுடனும் எமது அன்றாட அலுவல்களை செய்யவேண்டியிருக்கும் போது உணவினை உற்பத்தி செய்வதிலும் இடர் வரின் என்செய்வது. உலக உணவு மற்றும் வேளாண்மை நிலையத்தின் தகவல்படி பாலைவன வெட்டுக்கிளிகளின் பெருக்கம் முன்னைய காலங்களைவிட அதீதமாக இருப்பதாகவும் ஆபிரிக்க நாடுகளில் இது பில்லியன் கணக்கில் ஒரு படைபோல் நகர்ந்து பச்சைத் தாவரங்கள் அனைத்தையும் உணவாக்கி ஏப்பமிடுகின்றன என்றால் அதனை பயிர்செய்த விவசாயியின் நிலையை எண்ணிப்பாருங்கள். [illegible]

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 320



பாலைவனத்து வெட்டுக்கிளிகள்

ஒரு கூட்டமாக வந்து முற்றுகையிடும் இவ்வெட்டுக்கிளிகள் ஓரிடத்தில் வந்தமரும் போது அந்த இடமே வெறுமையான எதுவித பச்சையிலைகளும் இல்லாமல் உண்டு விடுகின்றன. அந்தளவுக்கு இவற்றினாலேற்படும் சேதம் மிக அதிகமாகும்.

இவ்வாறான நிலையில் வெட்டுக்கிளிகளை அழிப்பதற்காக பலமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். வானூர்தி மூலம் இரசாயனங்களை தெளிப்பதாகவும் ஆனால் அதற்கும் இவ்வெட்டுக்கிளிகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது அந்நாட்டு அரசாங்கங்கள் தவிக்கின்றன. நொந்து போயிருக்கும் விவசாயியின் விளைச்சலும் கைவந்து சேராவிட்டால் அவர்களால் அடுத்த பயிர்ச்செய்கைக்கு தாக்குப்பிடிக்க முடியாதுபோய்விடும். இரசாயனப் பாவிப்பு சூழலையும் அதிகளவில் மாசுபடுத்திவிடும் என்பதனால் என்னசெய்வது என்று தெரியாமல் திகைத்துப்போயிருக்கின்றனர் மக்கள். அதிகளவிலான செலவில் கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தினாலும் இவ்வகை வெட்டுக்கிளிகள் தம்மை தக்கவைப்பதற்கான அனைத்து வழிமுறைகளை பயன்படுத்துவதனாலும் இந்தப் பிரச்சினை தற்போது பூதாகாரமாக எழுந்திருகின்றது. [illegible]

[illegible]ள்ளதாக உலகளாவிய விஞ்ஞானிகளிடமிருந்து அறிக்கைகள் வந்தவண்ணமே இருக்கின்றன. அவ்வாறாயின் நாம் எவ்வகை முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதனை கவனத்திற் கொள்க.

வெட்டியுண்ணும் வாயுறுப்பைக் கொண்ட வெட்டுக்கிளிகளின் உடல் கடினமானது ஆகும். எந்த காலநிலையிலும் தம்மை பாதுகாத்துக்கொள்ள தேவையான பலவற்றையும் அவை வைத்திருப்பதாக கூறப்படுகின்றது. பறந்து செல்வதற்கான இருசோடி இறகுகளைக் கொண்டிருந்தாலும் பின்சோடி இறகுகளால் இவை இலகுவாக பறந்து திரியக்கூடியன. அவற்றின் இளைய பருவங்கள் நிறைவுடலிகளைப்போல இருந்தாலும் அவற்றுக்கு நன்றாக வளர்ந்த வெட்டுக்கிளிகளைப் போல இறகுகள் கிடையாது. இருப்பினும் அவை விரைந்து பரவலடையக்கூடியன. மிகவும் அடர்த்தியான கூட்ட மாக வரும் இந்த வெட்டுக்கிளிகளை சமாளிப்பது கடினமெனவும் கூறப்படுகின்றது. இவ்வாறான அதிகளவில் வெட்டுக்கிளிகளைப் பார்ப்பவர்கள் விரைந்து இதுபற்றி தெரிவிக்க வேண்டும்.

இதன்மூலம் வெட்டுக்கிளிகளினால் ஏற்படும் தாக்கத்தை சமாளிக்க முடியும். கொரோனாவினால் உணவுப் பஞ்சம் வரும் என முன்கூட்டியே எதிர்வுகூறப்பட்டிருக்கும் நிலையில் வெட்டுக்கிளிகளின் தாக்கமும் அதிகரித்தால் நிலைமை இன்னும் மோசமாகிவிட சாத்தியமுண்டு. பொறுப்புணர்ந்து நாம் அனைவரும் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டியதும் வெட்டுக்கிளிகளின் சேதத்தை அல்லது வெட்டுக்கிளிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதனை அவதானித்தால் அதனை உடன் எமக்கோ அல்லது விவசாயத் திணைக்கள விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கோ இன்னும் உங்களது கிராம அலுவலரிடமோ தெரிவிப்பது அவசியமானதாகும். எம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள இது மிகவும் அவசியமானதாகும்.

இந்த நிலையில் தற்போது உயிரியல் பூச்சிநாசினிகளை ஆபிரிக்க தேசத்தில் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள். சோமாலியாவில் 236,000 ஹெக்டேயருக்கு உயிரியல் பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள். மெற்றாறைசியம் அசிடுவம் (Metarhizium aciduam) என்னும் பூஞ்சணம் உயிரியல் பூச்சிநாசினியாகப் சிறப்பாக பயன்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இவற்றை பரந்துபட்ட அளவில் பயன்படுத்தும் போது நன்மை தருகின்ற பூச்சியினங்களைப் பாதிக்காதவாறு வெட்டுக்கிளிகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் அதனால் சூழலில் பாரிய தாக்கத்தை உயிரியல் பீடைநாசினிகள் ஏற்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினை அதிகமாக உள்ள பிரதேசங்களில் மெற்றாறைசியம் அசிடுவம் பூஞ்சணம் விசிறப்பட்டு வெட்டுக்கிளிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாமும் கவனமாக இருந்தால் இவ்வாறான வெட்டுக்கிளிகள் எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் போது விரைந்து பரிகாரத்தை தேடக்கூடிதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வகை கொரோனா வைரஸ் அவதானமாக செயற்படுங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்

(கொழும்பு)

புதிய வகை கொரோனா வைரஸ் அடையாளம் கண்டறியப்பட்டதை தொடர்ந்து, நாட்டின் மூன்றாவது அலைத் தாக்கம் தோற்றம் பெறாத வகையில் அவதானத்துடன் செயற்படுவது பொதுமக்களின் பொறுப்பாகும் என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செய லாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலங்களில் வணிக நடவடிக்கையில் ஈடுபடும் போது உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மிகவும் அவசியம்.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பும்போது, கொவிட்-19 நிலைமை மோசமடைந்து விட்டால் அது நாட்டை மேலும் தனிமைப்படுத்தி பொருளாதார ரீதியான பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுத்தும்.

இக் காலப் பகுதியில் குழந்தைகள், முதியவர்கள், தாய்மார்கள் மற்றும் அண்மையில் அறுவை சிகிச்சை செய்த நபர்களை நெரிசலான இடங்களுக்கு அழைத்து செல்வதை தவிர்க்கு மாறும் அவர் கோரினார். (நி-4)

# இலங்கை இராணுவம் பெற்ற அனுபவம் வேறு நாட்டு இராணுவத்திற்கு கிடைக்கவில்லை

## மார்தட்டும் இராணுவத் தளபதி

(கொழும்பு)

உலகில் மிக மோசமான பயங்கரவாத அமைப்பாகக் காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றி கொண்ட போது இலங்கை இராணுவம் பெற்ற அனுபவம் உலகின் வேறு எந்த நாட்டு இராணுவத்துக்கும் கிடைக்க வாய்ப்பில்லை என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் அமைதிகாக்கும் பணிகளுக்கான பயிற்சி கல்லூரியில் இடம் பெற்ற பிரியாவிடை அணிவகுப்பு நிகழ்வின் போது இதனைத் தெரிவித்த இராணுவத்தளபதி மேலும் குறிப்பிடுகையில் இலங்கையின் அமைதி காக்கும் படைகளை உலகின் அமைதி காக்கும் பணிகளுக்காக அமர்த்த ஐ.நா. சபை இணங்கிய பின்னர், இலங்கை இராணுவத்தின் வீரம், அச்சமின்மை உள்ளிட்ட பண்புகளை கண்டு இராணுவ வீரர்கள் பல்வேறு நாடுகளில் அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபட்டுத்தபட்டுள்ளனர்.

அமைதி காக்கும் படையினரின் செயற்பாடுகளில் நாட்டின் நற்பெயர் அடங்கியுள்ளது. தற்போதைய அமைதிகாக்கும் படையினரின் செயற்பாடுகள் ஐ.நா சபை மத்தியில் ஐ.நா சபையின் அமைதி காக்கும் பணிகளில் இலங்கைப் படையினரை மேலும் ஈடுபட்டுத்த வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும் என அவர் மேலும்தெரிவித்தார்.(நி-4)

# புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ள உணவுகளை வெளிப்படுத்துங்கள்

(கொழும்பு)



தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த உணவு பொருட்களில் புற்று நோய் மூலக்கூறுகள் உள்ளடங்கியுள்ளன என்பதையும், அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த வருடம் கொவிட் தொற்றின் காரணமாக தமிழ் - சிங்கள புத்தாண்டை நாட்டு மக்களுக்கு கொண்டாட முடியாமல் போனது. எனினும் இந்த ஆண்டு புற்று நோய் மூலக்கூறுகள் அடங்கிய எண்ணெய் இறக்குமதி அச்சத்தில் மக்களால் புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மிக்க இந்த விவகாரத்தை நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தை கோருகின்றோம். அத்தோடு இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும்சில உணவு பொருட்களிலும் புற்று நோய் மூலக்கூறுகள் இருப்பதாகக் கூறினார். அந்த உணவுகள் என்ன என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்து மாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறெனில் இந்த விவகாரத்திலும் அவர் நேரடியாக தலையிட்டு தீர்மானங்களை எடுக்க முடியும். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயத்தில் மாத்திரம் ஏன் வர்த்தகர்களுக்கு சாதகமாக செயற்படுகின்றார்? யுத்தம் மற்றும் தீவிரவாத செயற்பாடுகளை விடவும் அச்சுறுத்தலான நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. எனவே தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த உணவு பொருட்களில் புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ளன என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஹிருணிகா தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இரட்டைக் குழந்தைகள்

சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றது அல்லவா? அதிலே மூன்று வகை உண்டு. முதல் வகை ஒற்றுமையுடைய இரட்டைக் குழந்தைகள் Identical Twins.

ஆணின் உயிரணு, பெண்ணின் உயிரணு இது இரண்டும் சேர்ந்து கரு உருவாகின்றது அல்லவா? இது சாதாரணமாக வளர்ந்து பிறக்கின்ற பொழுது ஒரே குழந்தையாக பிறக்கும்.

சில சமயம் இது வளரும் போது இரண்டாக பிரிந்து வளர்ந்தால் ஒரே மாதிரியான இரண்டு குழந்தைகள் பிறக்கும். இது Identical Twins.

இப்படி பிறக்கிறது இரண்டும் ஆணாக இருக்கும். அல்லது இரண்டும் பெண்ணா இருக்கும். அபூர்வமாக சில சமயம் தாயின் இரண்டு உயிரணுக்கள் தந்தையின் இரண்டு உயிரணுக்கள் தனித்தனியாக சேர்ந்து இரண்டு கருக்கள் உருவாகி வளர்ந்து பிறப்பதுண்டு. இது Non Identical Twins. அல்லது Fraternal Twins. இப்படி பிறக்கும் போது ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாம்.

இதைத்தவிர மூன்றாவது வகை எப்படி என்றால்.. அது மிகவும் அபூர்வம்.. உடல் இரண்டும் ஒட்டிக் கொண்டே பிறக்கின்றது. சயாமிய இரட்டையர்கள் (Siamese Twins) என்று இதற்குப் பெயர். பொதுவாக இரட்டைக்குழந்தைகளாக பிறக்கின்றவர்கள் ஒருத்தரை ஒருத்தர் பிரிந்து வாழ்வது அபூர்வம். அதுவும் சின்ன வயதிலேயே பிரிந்து விடுகின்றவர்கள் மிகவும் குறைவு.அப்படி பிரிந்து வேறு வேறு இடங்களிலே வாழுகின்றவர்களைக் கண்டுபிடித்து அவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கின்றார் ஒருவர்.

அவர் தான் பேராசிரியர் தோமஸ் பூச்சார்டு. மின்னசோட்டா பல்கலைக் கழகத்தின் உளவியல் துறைத் தலைவர். ஒன்றாக பிறந்து.. பின்பு பிரிந்து.. ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் வெவ்வேறு இடத்தில் வாழ்ந்த இரட்டைகளைக் கண்டுபிடித்தார்.

அவர்களை எல்லாம் ஒரே இடத்திற்கு வரவழைத்தார். ஆராய்ச்சிக்கு சம்மதித்த இர்டையர்களை மின்ன சோட்டா பல்கலைக்கழகம் பணம் கொடுத்து கூப்பிட்டது.ஆறு நாட்கள் அவர்கள் எல்லாம் விருந்தாளியாக தங்கியிருந்தார்கள்.

அப்பொழுது அவர்களுடைய குணநலன்கள், நடை-உடை-பாவனைகள், பழக்க வழக்கங்கள், உடம்பிலே உள்ள நோய்கள்,பொழுது போக்குகள், நண்பர்கள்,தொழில் மத நம்பிக்கை இப்படி இது சம்பந்தமாக 15 ஆயிரம் கேள்விகள் கேட்டு, கிடைத்த விபரங்களை கம்யூட்டரிலே கொடுத்து விபரங்களை தெரிந்து கொண்டார்கள். அப்பொழுது தான் சில ஆச்சரியமான உண்மைகள் தெரிய வந்ததாம்.

ஜரீன் மில்லர், ஆன் சிங்கர் இந்த இரண்டு பெண்களும் இரட்டைக் குழந்தைகள். பிறந்த பொழுதே பிரிந்து விட்டார்கள். 60 வருடமாக ஒருத்தரை ஒருத்தர் பார்க்கவேயில்லை. அப்படி இருந்தும் என்ன ஒரு ஆச்சரியம் தெரியுமா? இவர்கள் இரண்டு பேரும் சந்திப்பதற்குப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த பொழுது...

இரண்டு பேரும் ஒரே மாதிரியான பரிசுப் பொருளையே வாங்கிக் கொண்டு வந்தார்களாம். ஒரே மாதிரி வேலைப்பாடுடைய தட்டுக்களைக் கொண்டு வந்திருந்தார்களாம். அமெரிக்காவிலே ஒரு இரட்டையர்கள். டோனி மிலாய் ரோஜர் புருக்.சின்ன வயதிலேயே இவர்களை இரண்டு வெவ்வேறு குடும்பங்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டது.

இவர்கள் சந்தித்த பொழுதும் ஓர் ஆச்சரியம். இரண்டு பேரும் பெட்டியைத் திறந்தார்கள் உள்ளே பார்த்தால் ஒரே மாதிரியான ஷேவிங் கிறீம். ஒரே மாதிரியான ஹெயார் ஓயில். இதைவிட ஆச்சரியம் இரண்டு பேருமே சுவீடனிலிருந்து இறக்குமதியாகின்ற ஒரே வகை பற்பசையை வைத்திருந்தார்களாம்.ஜிம் ஸ்பிசிங்கர்- ஜிம்லூயிஸ். இவர்களும் இரட்டையர்கள். 39 வயது வரைக்கும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் வளர்ந்துவிட்டார்கள். இவர்கள் சந்தித்துக் கொண்ட பொழுது தெரிய வந்த ஆச்சரியம் என்ன வென்றால்...

இரண்டு பேரும் கை நகங்களைக் கடிக்கின்ற பழக்கம் உள்ளவர்கள்.. கார் ரேஸ் பந்தயத்திலே விருப்பம் உள்ளவர்கள். புகை பிடிக்கிறவர்கள். ஒரே மாதிரியான கார் வைத்திருந்தார்கள். ஆளுமைச் சோதனையிலும் (Personality test) இரண்டு பேருக்கும் ஒரே மதிப்பெண். இரட்டையர்களை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் சுருக்கமாக என்ன சொல்கின்றார் என்றால்...

நம்முடைய குணநலன்களில் ஒரு சிறிய பகுதியை ஆனால் முக்கியமான பகுதியை- பெற்றோர்களிடமிருந்து நாம் பெற்ற மரபணுக்கள்(Genes) முடிவு செய்கின்றன. இதைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் நம் மரபணுக்களின் "கைதிகள்" அல்ல. நாம் வளரும் சூழ்நிலையும் நம்மை உருவாக்குவதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றது. அப்படி என்பது தான் அவருடைய முடிவு.

நம்ம ஆட்களிலே சில பேர் இரட்டைப் பிறவியாக பிறக்க வில்லை என்றால் கூட ஒரே மாதிரி குணம் கொண்டவர்களாக இருப்பது உண்டு. ஒரு குடும்பத்திலே பாகப்பிரிவினை பஞ்சாயத்தார் அண்ணன்காரனைக் கேட்டார்...உனக்கு இருக்கிற வெளிக்கடன் எவ்வளவு என்று! 5113ரூபாய் என்றான். தம்பிக் காரனை கேட்டார்... நான் வாங்கியிருக்கிற கடனும் 5113 ரூபாய் என்றான். எப்படி அது? என்று கேட்டார். அவன் எங்கே போனாலும் அவன் பின்னாலே போய் நானும் வாங்கிட்டு வந்து விடுவேன் என்றான்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 10 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இப் பதவிக் காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு ஆற்றிய சேவைகளினூடாக அம் மக்களின் மனங்களில் நிறைந்தார்.




அதிவண.
லோங் அடிகளார்

ஒரு கல்லூரியின் வளர்ச்சி என்பது அக் கல்லூரிச் சூழலிலுள்ள மக்களின் உண்மையான வளர்ச்சியுமாகும் என்பதை உணர்ந்து கொண்ட அடிகளார், யாழ். மக்களின் அறிவு வளர்ச்சிக்கென பொது நூல் நிலையமொன்றை உருவாக்கும் முயற்சியிலீடுபட்டு, அதற்காக நிதியமொன்றை ஈட்டும் பொருட்டு, உலகின் பல பாகங்களுக்கும் சென்று பணம் திரட்டி வந்து, தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூல் நிலையமெனப் போற்றப்படும் அளவுக்குச் சிறந்த நூல் நிலையமொன்றின் உருவாக்கத்தின் பிரதான பங்காளியானார். யாழ். பொது நூலக கட்டட நிர்மாணப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்த வணக்கத்துக்குரிய லோங் அடிகளார் அவர்களது உருவச்சிலை பின்னாட்களில் யாழ். பொது நூலக வளாகத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்தது என்பதும் குறித்த சிலை யாழ். நூலகத்தில் இடம்பெற்ற அத்துமீறலின் போது சேதமாக்கப்பட்டது என்பதும் வரலாற்றின் பெருந்துயரம்.

யாழ். மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தமது பரிசளிப்பு விழா அறிக்கைகளினூடாகவும் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளினூடாகவும் தேசிய மட்டத்தில் முன் வைத்ததோடு, அப் பிரச்சினைகளுக்கான தீர்வையும் தமது அறிக்கைகளினூடு கோடிகாட்டினார். யாழ். நகரில் முதன் முறையாக மாபெரும் கைத்தொழில் களியாட்ட விழாவை நடாத்தியும், "யாழ்ப்பாணத்தின் விடை" என்ற பெயரால் களியாட்டம் நிகழ்த்தியும், யாழ்ப்பாணத்தின் மீதும், அதன் மக்கள் மீதும் தாம் கொண்ட நேயத்தை வெளிப்படுத்தினார். அடிகளார் யாழ்ப்பாணத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட ஆழமான அன்பை வியந்த பிரபல நகைச்சுவை ஓவியர் "கொலெற்" அடிகளாரைத் தமிழராக உருவகப் படுத்திப் பல கேலிச் சித்திரங்களையும் அக்காலத்தில் வரைந்திருந்தார்.

சிறந்த ஆன்மீக வழிகாட்டியாகவும், சிறந்த நிர்வாகியாகவும், சிறந்த செயல் வீரனாகவும் திகழ்ந்து வந்த அடிகளார் அவுஸ்ரேலியாவுக்குச் சேவை புரியவென அழைக்கப்பட்ட போது, யாழ்ப்பாணத்து மக்கள் அனைவருமே கண்ணீர் மல்க விடை பெற்றுக்கொண்ட சிறப்பும் பெற்றார். இதனாலேயே இவர் "அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்" எனப் பலராலும் குறிப்பிடப்பட்டார்.

30.04.1961 இல் லண்டனில் இறைபதமடைந்த அடிகளாரின் உடல் அயர்லாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

### பொதுசன நூலகக் கட்டடம்

கொண்டு நிர்மாணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தேவாலயம், வித்தியாலயம் போல நூலகமும் ஒரு ஆலயம் என்பது அவர் மனங்கொண்ட மதிப்பு.

நரசிம்மன் நிர்மாணித்த கட்டடத்தைப் பொருளாதார வசதி நோக்கிப் பகுதி பகுதியாகவும் கட்டி நிறைவேற்றலாம் என்றார். அதற்கேற்ப அவர், அதன் மாதிரி அமைப்பை அழகுறச் செய்து 16.10.1953 இல் கொடுத்திருந்தார். கட்டட வேலையை உடனடியாகத் தொடங்குவதானால் குறைந்தது ஐந்து லட்சம் ரூபாவாவது கையிருப்பில் வேண்டும் எனக் கருதிய மாநகரபிதா சாம் சபாபதி, லோங் சுவாமிகள் முதலான அனுபவசாலிகளின் ஆலோச னையின் வண்ணம்.களியாட்டு விழா என்னும் காணிவேல் வைப்ப தற்கு ஒழுங்குகள் செய்தார். கட்ட டத்தை இரண்டு தட்டடங்களில் கட்டி முடிக்கத் தீர்மானித்து, முதற்கட்டமாக கட்டடத்தின் முன்பகுதிக்கான அடிக்கல் 1954ஆம் ஆண்டில் நாட்டப்பட்டது.

யாழ் பொதுசன நூல் நிலையத்திற்கு வெளியே இருக்கும் அதிவண. லோங் அடிகளார் அவர்களின் உருவச்சிலை



சேதமுற்ற சிலை (1983க்குப் பின்)  திருத்தப்பட்டு தற்போது இருக்கும் சிலை

### வளர்ந்த கதை

பொதுசன நூலகக் கட்டடம் வளர்ந்த கதை பற்றி "யாழ்ப்பாண நூல் நிலைய ஆவணத் தொகுப்பு" நூலில் ஒரு அத்தியாயமே எழுதப் பட்டுள்ளது. அதில் ஒருபகுதி கீழே தரப்படுகிறது.

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையக் கட்டடத்தை நிர்மாணம் செய்த கட்டடக்கலை நிபுணர் நரசிம்மன் தமிழ்ப்பண்பாடு, இந்துப் பண்பாடு, [illegible] அமைப்பு [illegible]

நூலக வளர்ச்சிக்காக யாழ் விநோத காணிவேல் விழாக்கள் நகரத்தில் நான்கு முறைகள் நடைபெற்றன. முதலில் 1952ஆம் ஆண்டிலும், இரண்டாம் முறை 1954 ஆம் ஆண்டிலும், மூன்றாம் முறை 1959 ஆம் ஆண்டிலும், பின்னர் 1963 ஆம் ஆண்டிலும் நடைபெற்றன. சாம் சபாபதி முயற்சி செய்யாதிருந்தால் யாழ். பொதுசன நூலகக் கட்டடம் விவேகமாக கட்டப் பெற்றிருக்க மாட்டாது. சாம் சபாபதியின் மூளையில் உதித்து நடை [illegible]ஒரு வருவாய் வழி [illegible]லாப சீட்டு.அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக்குக் கவர்ச்சிகரமான பெரும் பரிசுகளை பல பெரியவர்கள் கொடுத்து உதவினார்கள்.

லோங் சுவாமிகளின் அன்பர்கள், தொண்டர்கள், மாநகரசபை முதல்வர், ஏனைய நகரபிதாக்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணக் கலைஞர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பிரமுகர்கள் எல்லோரும் விழா மூலம் பணந்திரட்டுவதற்கு முழுமூச்சாக ஒத்துழைத்தார்கள். மாநகரசபை உத்தியோகத்தர்கள் சிலர் காணிவேல் நாட்களில் வீட்டுக்கே செல்லாமல் விழா வேலைகளை இரவு - பகலாகச் சிரமம் பாராமல் செய்து ஈடேற்றினர். இன்னும் பல பெரியார்களும் அரும் பாடுபட்டார்கள். இவ்வாறு அந்த நூல் கூறுகிறது.கட்டடத்தை நிர்மணித்த கலைஞர் நரசிம்மன் அது கட்டப் பெற்ற சமயங்களில் நரசிம்மன் இடையிடையே அங்கே வந்து மேற்பார்வை செய்து போனார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல் மேயரான சாம். ஏ.சபாபதியின் பதவிக்காலத்தில் நூலகக் கட்டடம் கட்டி முடிக்கப் பெறவில்லை. இவர் மேயர் என்னும் நிலையிலும் யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய சங்கத் தலைவர் என்னும் தகுதியிலும் 29.3.1954ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டியிருந்தார்.

நூல் நிலையக் கட்டட வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர்களாக இருந்தவர்கள் சாம். ஏ.சபாபதி (1952-1954), காதி எம். ஏ.எம். எம். சுல்தான்(1955), எஸ். ஏ.நவரத்தினம் (1956-1957) ஆகியோரும் அதன்பின் அல்பிரட் துரையப்பா 1958 நடுப்பகுதியிலிருந்து 1960 நடுப்பகுதிவரை யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயராக இருந்தார்.

பழைய கட்டத்திலேயே நடைபெற்று வந்த இந்நூல்நிலையம் 17.10. 1958 தொடக்கம் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் எனப் பெயர் பெற்று நிலவிவந்தது. யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர் அல்பிரட் தங்கராசா துரையப்பா யாழ்ப்பாண மாநகரை அழகுபடுத்தவும், விளையாட் டரங்கை விசாலித்துப் பெரிதாக்கவும், நூலகத்தைக் கட்டியெழுப்பவும், போக்குவரத்துப் பாதைகளை இருசாலையாக்கவும், நவீன சந்தை அமைகவும் பல திட்டங்களை வகுத்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி முகவரிக்கு தபால்மூலம் அனுப்பப்பட்ட போதைப்பொருட்கள்




(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட ஐந்து பொதிகளிலிருந்து ஒரு தொகை போதைப்பொருட்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மாலை கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 7 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊடகங்கள் முன்னிலையில் குறித்த பொதிகளை சுங்கப் பிரிவு அதிகாரிகள் திறந்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக இந்த போதைப்பொருட்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளினால் பொலிஸ் போதைப் பொருள் பிரிவில் ஒப்படைக்கப்பட்டன. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## அற்புதமான ஆகமங்கள்

ஆலயத்துக்குச் சென்று வழிபடும் போது கருவறையில் இருந்து வெளியாகும் அருள் அலைகள் மூலம் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறுவதை நீங்கள் உணர்ந்து இருப்பீர்கள்.

பழைமையான ஆலயங்களில் ஆகம விதிப்படி பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடப்பதால் அத்தகைய ஆலயங்களில் கூடுதல் பலன்களை நாம் பெற முடியும்.

### ஆகமம் என்றால் என்ன?

"தொன்று தொட்டு வரும் அறிவு" என்று அர்த்தம். "இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞான நூல்" என்றும் அறிஞர்கள் சொல்கிறார்கள்.

"ஆகம வழி நிற்பார்க்கு இறைவன் அணுகி வந்து அருள்புரிவான்" என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

"ஆ" என்பது இறைவனைக் குறிப்பிறது. "கமம்" என்றால் "அழைத்தல்" என்று அர்த்தமாகும். எனவே "ஆகமம்" என்ற சொல்லுக்கு "இறைவனை அழைத்தல்" என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

இது தவிர பக்தர்கள் தன்னை எவ்வாறு வழிபட்டு உயர்வடைய வேண்டும் என்ற வழிபாட்டு முறைகளையும் மற்ற நியதிகளையும் பற்றிச் சொல்வதே ஆகமம் என்றும் சொல்வார்கள்.

"ஆகமம்" என்ற சொல் ஆகதம், கதம், மதம் ஆகிய மூன்று சொற்களின் சேர்க்கை என்பார்கள். இதற்கு வருபவை, சென்றவை, ஏற்பவை என்று பொருளாகும்.

ஆகமத்தில் எத்தனையோ வகைகள் உள்ளன. சிவாலயங்கள், வைணவத் தலங்கள், சக்தித் தலங்கள் என ஒவ்வொரு இறைவழிபாட்டுக்கும் தனித்தனியான ஆகமங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆகமங்கள் அனைத்தும் மனிதனால் உருவாக்கப்பட்டவை அல்ல. இறைவனால் படைக்க்ப்பட்டவை. சைவ சமயத்தில் உள்ள ஆகமங்கள் அனைத்தும் சிவபெருமானால் சக்திக்கு உபதேசிக்கப்பட்டவை என்று கருதப்படுகின்றன.

### ஆகமங்கள் ஏன் படைக்கப்பட்டன?

இந்தப் பூமியில் பிறவி எடுக்கும் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஏதாவது ஒரு வகையில் ஆணவம், கன்மம், மாயை இருக்கும்.

இந்த மூன்று அழுக்குகளையும் நீக்கி ஞானத்தை உண்டாக்கி முக்திப் பாதைக்கு வரவழைக்கும் தன்மை ஆகமங்களுக்கே உண்டு. எனவேதான் ஆலய வழிபாட்டில் ஆகம விதிகள் உயிருக்கு நிகரான உன்னதமாகக் கருதப்படுகிறது.

ஆதிகாலத்தில் இருந்தே தமிழர்கள் ஆகம வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் உருவ வழிபாட்டைக் கொண்டிருந்தனர். ஆனால் ஆரியர்கள் வேள்வி வழிபாட்டைக் கொண்டிருந்தனர். இதனால் ஆதி காலத்தில் வட இந்தியாவில் ஆகமங்கள் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை.

வடநாட்டவர்கள் ஆகமத்தை விட வேதங்களையே முன் நிறுத்தினார்கள். வேதங்கள் மூலமான வழிபாடு என்பது அறிவின் மூலம் இறைவனைக் காண்பது.

ஆனால் ஆகமம் மூலமான வழிபாடு என்பது அன்பு முலம் இறைவனைக் காண்பதாகும். நம் முன்னோர்கள் இந்த வகை வழிபாட்டையே நமக்குத் தந்து சென்றுள்ளனர்.

அதனால்தான் நாம் இறைவனுக்கு உருவம் கொடுத்து, அபிஷேகம் செய்து, அழகுபடுத்தி, நைவேத்தியம் படைத்து, அனைத்து ஆராதனைகளும் செய்து அன்பும் மகிழ்ச்சியும் பொங்க வழிபாடு செய்கிறோம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது



(கொழும்பு)

முல்லேரியா பகுதியில் பொலிஸ் விசேட அதிரடைப் படையினர் முன்னெடுத்த சோதனையின்போது பாதாள உலக குழு நபரான "சீட்டி" எனப்படும் சரத்குமார என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீட்டி, அவரது வீட்டில் நிலத்தடியில் அமைக்கப்பட்ட ஒரு பதுங்கு குழியில் பதுங்கியிருந்த சமயத்தில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் வெலிகம பகுதியில் 112 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒன்பதாவது சந்தேக நபர் இவர் என பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அங்கொட லொக்காவுடன் தொடர்பிலிருந்ததாக கூறப்படும் இவர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அவரை கைதுசெய்ய பொலிஸாரும் விசேட அதிரடைப் படையினரும் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 1,187 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

நேற்று முன்தினம் வெளிநாடுகளில் இருந்து 1,187 இலங்கையர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கு இராணுவத்தினரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 180 | 250 |
| தக்காளி | 60 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 100 |
| கரட் | 170 | 160 | 200 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 45 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 280 | 280 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 500 |
| போஞ்சி | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 45 | 40 | 50 |
| தேசிக்காய் | 130 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 240 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 180 | 280 |
| முள்ளங்கி | 40 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

## ஒரு கோடிக்கும் மேல் வாக்களிக்கவில்லை

(டில்லி)

தமிழகத்தில் 16 ஆவது சட்டமன்ற பொதுத் தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. மொத்தம் 6 கோடியே 28 இலட்சத்து 69 ஆயிரத்து 955 வாக்காளர்கள் வாக்களிக்க இருந்தனர்.

இதில் 4 கோடியே 57 இலட்சம் பேர் மட்டும் வாக்களித்து இருக்கின்றனர். ஒரு கோடியே 71 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை. கொரோனா பரவல் அச்சம் வாக்குப்பதிவு குறைந்ததற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-4-8)

# இதுவரை ஒரு சொட்டு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாத 20 ஏழை நாடுகள்

## ஆய்வின் அதிர்ச்சி தகவல்

**20 இற்கும் மேற்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு இன்னும் ஒரு சொட்டு தடுப்பு மருந்து கூட சென்று சேரவில்லை என ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனம் மேற்கொண்ட அந்த ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.**

உலகின் பின்தங்கிய கண்டமான ஆபிரிக்காவில் 54 நாடுகள் உள்ளன. இவற்றில் இதுவரை வெறும் மூன்று நாடுகள் மட்டுமே ஒரு சதவீதத் துக்கும் குறைவான மக்களுக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளன.

உலகின் பணக்கார நாடுகளுக்கு அதிவேகத்தில் தடுப்பு மருந்துகள் கிடைத்து வருகின்றன என அந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஏழை நாடுகளுடன் ஒப்பிடுகையில் செல்வந்த நாடுகள் 25 மடங்கு அதிவேகமாக தடுப்பூசிகளைப் பெற்றுள்ளன.

உலகில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு தடுப்பு மருந்து சென்று சேர்வதில் தாமதம் ஏற்படுகிறது.

உலக சுகாதார அமைப்பின் கொவெக்ஸ் திட்டத்தின் மூலமாக ஆப்பிரிக்க மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு தடுப்பு மருந்து வழங்கி வருகிறது.




இது தாமதமாக உள்ள துடன், போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு

(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள டெக்ஸ்சாஸ் பூங்காவில் மர்ம நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, 5 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்திற்கு உடனடியாக பொலிஸார் விரைந்த போதும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட மர்ம நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

டெக்சாஸின் பிரையன் நகரப் பொலிஸார் சந்தேக நபரைத் தேடி வருவதோடு விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (நி-4-8)

## போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் 13 பேருக்கு மரண தண்டனை

(ஜகார்த்தா)

சுமார் 400 கிலோகிராம் மெத்தாம்பேட்டமைன் போதைப் பொருள் கடத்தல் குற்றஞ் சாட்டப்பட்ட ஈரானிய தம்பதியர், பாகிஸ்தானியர் ஒருவர் உள்ளிட்ட 13 பேருக்கு மரண தண்டனை விதித்து இந்தோனேசிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப் பட்டவர்களின் 3 ஈரானியர்கள், ஒரு பாகிஸ்தானியர் மற்றும் 9 இந்தோனேசியர்கள் அடங்குகின்றனர்.

இவர்களுக்கு துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றுமாறு மேற்கு ஜாவா மாகாணத்தில் உள்ள சுகபூமி நகர நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக இந்தோனேசிய அரசு தலைமை வழக்கறிஞர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் ஒரே நேரத்தில் 13 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (நி-4-8)

## பிரேசிலில் ஒரே நாளில் 4 ஆயிரத்திற்கு மேல் உயிரிழப்பு

(பிரசெல்ஸ்)

பிரேசிலில் தொடர்ந்து இரண்டாவது நாளாக கொரோனா வைரஸ் தொற்றினால் நாளாந்தம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் பிரேசிலில் 4,249 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு தேசிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த புதன் கிழமை கொரோனா வைரஸ் தொற்றினால் பிரேசிலில் 4,195 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2279

**தர்மினி**

கடவுளே என் வாழ்க்கையில் விளையாடி விளையாடி உங்கள் உடம்புக்கு ஏதாச்சும் ஆகப்போகின்றது.



கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துவிட்டு விளையாடுப்பா...

**அபிலோசனா**

குழந்தைகளின் கோபத்தில் நியாயம் இருக்கிறதோ இல்லையோ அழகு இருக்கிறது.



**அபி**

ஒரு மணி அடித்தால் கண்ணே உன் ஞாபகம்



நமக்கு சோறு தான் ஞாபகம் வருது

**மதுசன்**

செய்தி- நாளை அக்னிநட்சத்திரம் ஆரம்பம்.



இப்ப மட்டும் என்ன மௌன ராகமா ஓடிற்று இருக்கு!

**தர்சிகன்**



இதை நிஜ பாம்பு என்று நினைத்து எவன் கட்டையால் அடித்து இவனோட மண்டையை உடைக்க போறான்னு தெரியலயே

**சிந்துஜன்**

சாயங்காலம் 5 மணிக்கு வேலை முடியுது...



வெள்ளைக்காரன் கிட்ட இருந்து விடுதலை வாங்கிய மாதிரியே ஒரு பீலிங்கு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொது வாழ்வு என்பது புயல் வீசும் கடலுக்கு ஒப்பாகும். எனினும் அதனைக் கடந்து குறிப்பிட்ட இடத்தை சேர்வதில்தான் இன்பம் இருக்கிறது. - எம்.என்.ராய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் தன்னார்வ எழுச்சியைத் தடுக்க...

யாழ்ப்பாண மாநகர முதல்வரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்.மாநகர காவல்படையின் சீருடை தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் விசுவலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாத குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்ததற்குப் பின்னால், மாநகர காவல்படையின் சீருடைதான் காரணமா? என்ற கேள்வி எழவே செய்கிறது.

அவ்வாறானதொரு கேள்வி எழும்போது, சீருடையைச் சாட்டாக வைத்து யாழ்ப்பாண மாநகர முதல்வரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் எச்சரித்து - அச்சுறுத்த முடியும் என படைத் தரப்பு கருதியுள்ளதென்று ஊகிப்பதில் தவறில்லை.

உண்மையில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆரம்பித்த யாழ்.மாநகர காவல்படை என்பது சட்டத்தை மீறிய செயலாகக் கருதக் கூடியதன்று.

கொழும்பு மாநகர சபையில் இருக்கக் கூடிய ஒரு கட்டமைப்பையே முதல்வர் மணிவண்ணன் யாழ்ப்பாண மாநகர சபையில் அமுலாக்கம் செய்தார்.

அப்படியாயின் யாழ்.மாநகர முதல்வரின் செயற்பாடு எந்தவகையிலும் சட்டத்தை மீறவில்லை.

மாறாக யாழ்.மாநகர காவல்படையை உருவாக்கியது தவறல்ல. அவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைதான் சிக்கல் என்றால், அந்த விடயம் இந்தளவு தூரத்துக்கு சென்றிருக்க வேண்டுமா? என்பதுதான் நம் கேள்வி.

மாநகர காவல்படையின் சீருடை ஏலவே புலிகளின் காவல்துறையின் சீருடையைச் சார்ந்தது என்று படைத்தரப்பு கருதுமாயின், யாழ்.மாநகர முதல்வரை அழைத்து குறித்த சீருடையைத் தவிர்த்து இன்னொரு சீருடையை அறிமுகப்படுத்துங்கள் என்று கூறுவதனூடு சம்பந்தப்பட்ட பிரச்சினையை முடிவுறுத்தியிருக்க முடியும்.

ஆனால் அவை எதனையும் செய்யாமல் யாழ்ப்பாணத்தின் நகர பிதா என்ற கௌரவத்துக்குரிய பதவியில் இருப்பவரை நடுநிசியில் கைது செய்து அவரைச் சிறையில் அடைப்பதென்பது தமிழ் இனத்துக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே கருதப்படும்.

ஆம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்குப் பின்பு தமிழ் மக்களின் தன்னார்வ எழுச்சியை எப்படியும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற சிறுமைத்தனம் **'சி'** இடம் எழுந்துள்ளதால், அதன் பரீட்சார்த்த நடவடிக்கையே யாழ்.மாநகர முதல்வரின் கைது என்று கருத்துரைப்பதில் தவறேதுமில்லை.

### வடக்கு, கிழக்கில் தொல்லியல் ஆய்வை மேற்கொள்வதற்கு

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் அனுமதி பெறப்பட வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் விதுர பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட முன்னர் அது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்அனுமதி பெறப்பட வேண்டும் என மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உரிய தொல்லியல் திணைக்கள அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் கோரிக்கைக்கு இணங்க கொழும்பில் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின்போதே துறைசார் அமைச்சர் உரிய அனுமதிகளை பெற்று அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறு பணித்திருந்தார்.

அத்துடன் யாழ்ப்பாணம் - நிலாவரைக் கிணறு மற்றும் கிளிநொச்சி-உருத்திரபுரீஸ்வரர் ஆலய சூழல்களைதான் நேரடியாக வந்து பார்வையிடும் வரை அங்கு எவ்விதமான அகழ்வுப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டாம் எனவும் அதிகாரிகளை அமைச்சர் பணித்திருந்தார்.

அதனை விட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ள பிரதேசங்களில் உள்ள பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கும் முன்கூட்டியே அகழ்வுப் பணி தொடர்பான தகவல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட யாழ் .மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் அங்கஜன்,

தொல்பொருள்திணைக்களத்தினர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி தன்னிச்சையாக யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதனால் மக்கள் அச்சமடைகின்றனர். அத்துடன் யாழ்.மாவட்டத்தில் குறித்த திணைக்களத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உரிய தகுதிநிலைக்கு தரமுயர்த்தும் போது மொழிப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டு மக்களுக்கு தெளிவூட்டக்கூடிய நிலைமை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு -கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-3,30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** எருவன் கொடிகாமம், கரம்பைக்குறிச்சி, கரம்பன், கறுக்காய், வரணி குடமியன், கொடிகாமம், மந்துவில், மிருசுவில் வடக்கு, நாவற்காடு, சுட்டிபுரம், தாவளை, இயற்றாலை, வாழைத்தோட்டம், வரணி கலைவாணி, வரணி சந்தைப் பிரதேசம், வரணி மாசேரி, மாவடி சுகாதார அமைச்சு பண்ணை, சிறைவளாகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ். கோட்டை, பண்ணை, வில்லூன்றி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறவந்துலாவ, எல்லப்பர் மருதங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## கொழும்பு மாநகர மேயர் கைது செய்யப்படுவாரா?

### மங்கள சமரவீர கேள்வி

(கொழும்பு)

யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கருத்து வெளியிட்டுள்ளார்.

யாழ். மாநகர காவல் படை நியமித்தமை தொடர்பில் பயங்கரவாத புலனாய்வுத்துறையினரால்அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த பதிவில்,

"தனது நகர சபை பாதுகாப்பு படை அணிந்திருந்த சீருடைகளை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத புலனாய்வு பிரிவின் கீழ் யாழ்ப்பாண மேயர் கைது செய்யப்பட்டார். கொழும்பு நகர சபையின் பாதுகாப்பு காவல் படையினரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான சீருடைகளை அணிகின்றார்கள். இந்த நிலையில் கொழும்பு மேயர் விடுதலை புலிகள் அமைப்பிற்கு புத்துயிர் அளிக்க முயன்றார் என நாங்கள் குற்றம் சாட்டப் போகின்றோமா?" என மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார். (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## அதிகம் பெருமைப்படாதே

❖ நல்ல நூல்களைப் படிப்பது, சொற்பொழிவுகளை நடத்துவது இவற்றைவிட அன்பால் மட்டுமே ஆன்மிகத்தில் மேம்படமுடியும்.

❖ தேவையற்ற சிந்தனைகளை விட்டுவிட்டு மனப்பூர்வமாக இறைவனை வழிபட்டால், அவன் இருப்பதை உணரலாம்.

❖ பக்தனாக விரும்புகிறவன், சொர்க்கத்தை அடைவது போன்ற ஆசைகளை தொடக்கத்திலேயே விட்டுவிட வேண்டும்.

❖ வெறுப்பையும், கோப உணர்ச்சியையும் அடக்கும் போது, அந்த அளவிற்கு நல்ல ஆற்றலை சேமிக்கிறோம். அந்த ஆற்றல் உயர்ந்த ஆன்மிக சக்தியாக மாறுகிறது.

❖ ஆன்மிக அறிவால் மட்டுமே நமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்க முடியும். மற்ற அனைத்து அறிவும் அதை குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே நீக்கும்.

❖ உன்னைப்பற்றி அளவுக்கு மீறி பெருமை கொள்ளாதே. பிறர் பெறாத அந்த புகழை உனக்கு அளித்தது இறைவனின் அருளே. அதை ஒரு வழிபாடாக செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## நட்பால் நன்மை கிடைக்கும்

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**கடக இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டு அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தோடும், கண்டகச் சனியின் சஞ்சாரத்தோடும் பிறக்கின்றது. எனவே விரயங்களையும் விருப்பதிற்கு எதிரான சூழ்நிலையையும் சந்திக்கக்கூடிய ஆண்டாகவே இந்தப் புத்தாண்டு அமைகின்றது. இருப்பினும் தொழில் ஸ்தானத்தில் நான்கு கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டு கூட்டுக்கிரக யோகம் உருவாகின்றது. அத்தோடு புத -சுக்கிர யோகமும், புத - ஆதித்ய யோகமும் இருப்பதால், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். தெய்வ வழிபாடுகளும் முன்னோர் வழிபாடும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன், தொழில் ஸ்தானத்தில் தனாதிபதி சூரியனோடும், சகாய - விரய ஸ்தானாதிபதி புதனோடும் இணைந்திருக்கின்றார். யோகம் தரும் செவ்வாய், இலாப ஸ்தானத்தில் ராகுவோடு கூடியிருக்கின்றார். எனவே துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களின் ஆதரவோடு நல்ல காரியங்கள் பலவற்றையும் செய்து முடிப்பீர்கள். சுக்கிரனும் செவ்வாயும் பரிவர்த்தனை யோகம் பெற்று ஆண்டு தொடங்குவதால், ஆபரணங்கள் வாங்கும் யோகமும் உண்டு. பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மன அமைதி குறைவாகவே இருக்கும்.

புத - ஆதித்ய யோகம் இருப்பதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடலாம். பிள்ளைகளின் பட்ட மேற்படிப்பு சம்பந்தமாக, ஏதேனும் முயற்சிகள் செய்தால் அதில் வெற்றி கிடைக்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும் ஆண்டு இது. பிள்ளைகளின் மணவிழா, பெற்றோர்களின் மணி விழா, முத்து விழா, பவளவிழா மற்றும் புதுமனை புகுவிழா போன்ற விழாக்களை நடத்திப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் அவர், வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். இதன் விளைவாக கடன்சுமை குறையும். புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். அரச பணியில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் வரலாம். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் கிடைக்கும். குரு 9 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குவதால், தந்தை வழியில் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குரு பகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, அதன் பிறகு 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன் பிறகு 13.4.2022 இல் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 2, 4, 12 ஆகிய மூன்று இடங்களிலும் பதிகின்றது. எனவே அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் வாயிலாக உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கப் போகின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 2 ஆம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். எனவே குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இது வரை நடைபெறாத சில காரியங்கள், இப்பொழுது நடைபெறும். கல்வித் தடை அகலும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் தாய்வழி ஆதரவு கிடைக்கும். தொழில், முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கடல் தாண்டிச் சென்று பணிபுரிய வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும். இடம், வீடு வாங்குவது சம்பந்தமாக அல்லது விற்பது சம்பந்தமாக நீங்கள் செய்த முயற்சி கைகூடும்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். குறிப்பாக வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாண காரியங்களை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் திடீரென மாற்றங்கள் வரலாம். வரும் மாற்றங்கள் எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வதே சிறந்தது. மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்க்க முன்வரவில்லை என்பதனால், வேறு வேலைக்கு முயற்சி செய்வது பற்றி சிந்திப்பீர்கள்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. இதன் விளைவாக இது வரை இருந்து வந்த ஆரோக்கியத் தொல்லை அகலும். ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்ன மருத்துவர்கள், இனி சாதாரண சிகிச்சையிலேயே குணமாக்கிவிடலாம் என்று ஆணித்தரமாகச் சொல்வர். மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் இனி வந்து கொண்டேயிருக்கும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதியும், வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியிலும் உங்களுடைய எண்ணங்கள் செல்லலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 4 ஆம் இடத்தில்




கேதுவும், 10 ஆம் இடத்தில் ராகுவும் வரப்போகின்றார்கள். 10 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால், தொழில் ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, 'சுயதொழில் செய்தால் என்ன?' என்ற சிந்தனை உருவாகும். தொழில் செய்ய முன்வரும் பொழுது கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொருளாதார முன்னேற்றத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். அரசு வழியில் கூட எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே வாழ்க்கைத் துணையோடு பிரச்சினைகள் வரலாம். உங்களுக்கு வாய்த்த தொழில் பங்குதாரர்கள் உங்களை விட்டு விலகலாம். எதிர்பாராத் இழப்புகள், விரயங்கள் உண்டு. எதையும் எளிதில் நம்பும் உங்களுக்கு, சனி பகவான் அனுபவத்தை கற்றுக் கொடுக்கும் நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணிமாற்றம் அல்லது பணிநீக்கம் செய்யப்படலாம்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.4.2021 முதல் 3.6.2022 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய் - சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் மிகவும் விழிப்புணர்ச்சி தேவை. என்ன தான் நீங்கள் முறையாகச் செயற்பட்டாலும் எதிரிகள் உங்கள் செயற்பாடுகளில் குறையையே காண்பார்கள். பணம் கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. மனக்கலக்கம் ஏற்படும் நேரம் இது.

**பெண்களுக்கான பலன்கள்**

கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய ஆண்டாக இது அமைகிறது. கண்டகச் சனியின் ஆதிக்கத்தால் கடமையில் தொய்வு ஏற்படும். ஆரோக்கிய பாதிப்புகள் அடிக்கடி ஏற்படலாம். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள்.

பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணி நீக்கம் ஆகாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். செவ்வாய் - சனி பார்வை காலத்தில் மிகுந்த கவனம் தேவை. அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

பௌர்ணமி தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபாடு செய்து வாருங்கள். மேலும் உங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் அபிராமி அம்மன் வழிபாட்டையும் மேற்கொண்டால் வாழ்க்கை வசந்தமாக மாறும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி...

திறக்கப்படுகின்ற போதிலும் அதில் பணியாற்றுபவர்கள் ஒவ்வொருவரும் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டு அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தும் பத்திரம் வைத்திருந்தால் மட்டுமே வியாபார மையங்களைத் திறக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3,18,33)

## ஆண் ஒருவரின்...

பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 40 வயதான சி.இராமேஸ்வரன் என்ற நபரே வீட்டில் தனித்திருந்த வேளையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரதேச மரண விசாரணை அதிகாரி சி.தவமலர் மரண விசாரணைகளை முன்னெடுத்து பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்திருந்தார். (ம-3,30)

## யாழ்ப்பாணத்தில்...

பீட ஆய்வு கூடம் இரண்டிலும் 760 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில் 26 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் யாழ்ப்பாணத்தில் 24 பேரும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 22 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் 14 நாட்களின் பின் நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே அவர்களுக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி கண்டாவளை, முல்லைத்தீவு ஆகிய இரு இடங்களில் தலா ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## கணவனைத்...

நேற்று அவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கொரோனாவால் அண்மையில் உயிரிழந்திருந்தார்.

இதேவேளை அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் சிலர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த முதியவரின் மனைவிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் கொழும்பு ஹோமாகம வைத்தியசாலையில் நேற்று மரணமடைந்துள்ளார். (ம-3,299)

## திரவத்தினை...

தெரிவிக்கப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் நாகர் கோவில் கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தையா ஸ்ரீகுமார் (வயது- 46) என்பவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாகர் கோவில் கடற்பரப்பில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் காணப்பட்ட திரவத்தினை அப்பகுதியை சேர்ந்த பலர் அருந்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் மேற்படி நபர் உடல் பாதிப்புக்கு உள்ளான நிலையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றதாகவும் பின்னர் வீடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை அவரின் உடல்நலம்பாதிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் தனியார் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60)

## எதிர்வரும்...

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இந்த விசேட பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த விசேட பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தெல்லிப்பழை...

இதில் 5 மாணவர்கள் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தும் இடம், தமக்கு சொந்தமானது எனவும் அதில் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்த வேண்டாம் எனவும் கூறி தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவர்களினால் நேற்று [illegible] கடுமையான [illegible]

னர்.

கடந்த சில மாதங்களாக இந்தக் காணிப் பிரச்சினை நடைபெற்று, தற்போது அந்த நிலம் கல்லூரிக்கு சொந்தமானது என மாகாண கல்வித் திணைக்களத்தினால் மூன்று வருடங்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. (ம-3,18,33)

## மணிவண்ணன்...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்றிரவு அவர் முற்படுத்தப்பட்டபோது, பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

யாழ்.மாநகர சபையில் காவல்படை உருவாக்கியமை மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபையில் வரி வசூலிப்பாளர்களுக்கு தமிழீழ காவற்றுறையின் சீருடையை ஒத்த சீருடையை வழங்கியதாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவினால் நேற்று அதிகாலை 1.40 மணிக்கு கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் முதல்வர் சட்டத்தரணி வி.மண்ணிவண்ணன் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டார்.

சுமார் 10 மணி நேர விசாரணையின் பின்னர் முதல்வர் வி. மணிவண்ணன் நேற்றிரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இலங்கை தண்டனைச்சட்டக் கோவை 120, 332 உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல சிரேஷ்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகி மணிவண்ணன் தரப்பு வாதத்தை முன் வைத்தனர்.

முதல்வர் மணிவண்ணனை பிணையில் விடுவித்த நீதிமன்று வழக்கை ஜூன் 28ஆம்திகதிவரை ஒத்திவைத்தது. (ம-3,18,33,250)

## அரா...

தெரிவித்துள்ள யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், நகரின் தூய்மையைப் பேண நடவடிக்கை எடுத்தது அவர்களின் பார்வையில் தவறென்றால் அதே தவறைத் தொடர்ந்து செய்வோம் எனவும் கூறினார்.

சட்டம், ஒழுங்கின் பிரகாரமும் மாநகர சபைக்கும் அதன் முதல்வருக்கும் இருக்கின்ற அதிகாரத்தின் பிரகாரமே நான் தூய்மைச் செயற்பாடுகளை முன்னெடுக்க காவல் பணியாளர்களை நியமித்தேன்.

இந்நிலையில் மாநகர சபையில் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற கேவலமான செயற்பாடே எனது கைது எனவும் மணிவண்ணன் தெரிவித்தார்.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் தனது சார்பாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிமன்றம் முன்பாக செய்தியாளர்களிடம் பேசும்போதே மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

என்னை யாழ்.பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் நீண்ட நேரம் விசாரணை செய்தனர். பின்னர் நேற்று அதிகாலை 2 மணியளவில் உங்களைக் கைது செய்து பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கிறோம் எனத் தெரிவித்தனர். பின்னர் என்னை வவுனியா கொண்டு சென்று தடுத்து வைத்து வாக்குமூலம் பெற்றனர்.

மாநகர சபை பணியாளர் நியமனம் மற்றும் அவர்களின் சீருடை விடயத்தில் புலிகளை மீள் உருவாக்கம் செய்வதாக என் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

மாநகர சபையின் சட்டவரம்பின் கீழ் செயற்பட்டது பயங்கரவாதமா? எனவும் மணிவண்ணன் கேள்வி எழுப்பினார்.

வாக்குமூலத்தின் பின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் என் மீது வழக்குப் பதிவு செய்யாமல் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

மாநகர சபையின் சுயாதீன செயற்பாடுகளில் செயற்படுகின்ற எந்த அதிகாரமும் பொலிஸாருக்கு இல்லை. பொலிஸாரின் இவ்வாறான அராஜக செயற்பாட்டுக்கு எதிராக தொடர்ந்து சட்ட ரீதியாகப் போராட நான் தயார். பொலிஸ் அராஜகத்தை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் மணிவண்ணன் கூறினார். (ம-3)





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர...

குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸ் நடவடிக்கைக்கு உட்படுத்த முன்னர்.

தொடர்புடைய அமைச்சால் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

மேலும் கொழும்பு மாநகர தரிப்பிட அதிகாரிகளின் சீருடைகளையும் புலிகளுடையதை ஒத்ததாக பார்க்க முடியுமா என்றும் கேள்வியெழுப்பியுள்ளது. (ம-3)

## அடிப்படை சுதந்...

அமெரிக்க தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ் தனது டுவிட்டரில் யாழ். மாநகர மேயரின் கைது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில், "யாழ். மாநகர மேயரின் கைது கவலைக்குரியது.

அனைவரினதும் அடிப்படைச் சுதந்திரத்தை பாதுகாக்கும் அதேநேரத்தில், இறுக்கமான சட்ட விதிமுறைகளே (நீதித்துறை பாதுகாப்புகளுடன் ) பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கான சிறந்த வழியாகும்." என்று அவரது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ம-03)

## மணிவண்ணன்...

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி - பதில் அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

**ஊடகவியலாளர் கேள்வி :** யாழ். மேயர் மணிவண்ணன் கைதானது சம்பந் தமாக உங்கள் பார்வை என்ன?

**பதில் :** யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமை மோசமான இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையிலானது.

வெளிநாடுகள் பலவற்றில் இள நீல ஆடைகளை காவல் கடமைகளில் ஈடுபடும் குழுக்கள் பயன்படுத்துவது வழமை. கொழும்பு மாநகர சபையும் இள நீல நிற சீருடையுடன் பணியாளர்களை அமர்த்தியுள்ளது. ஆனால், யாழ். மாநகரசபை முதல்வருக்கு மட்டும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப்புலிகளின் காவல்துறையின் இளநீல நிற ஆடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது.

அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரசாங்கத் தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன். ஒரு சிறிய மாநகரத்தை நிர்வகிப்பதற்கும் தமது பிரதேசங்களை தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்குக் கூட தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதை சகித்துக்கொள்ள முடியாமல் இருக்கும் இந்த அரசாங்கத்தின் மனநிலையையும், செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். புலிகளின் சீருடைச் சீலையைப் போன்ற எந்த ஒரு சீலையையும் எவரும் பாவித்தலாகாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளதோ நான் அறியேன். 12 வருடங்களுக்கு முன்னர் இறந்து போன புலிகள் மீது அரசாங்கத்திற்கு அவ்வளவு பயமா என்று கேட்க வேண்டும் போல் தோன்றுகின்றது. இந்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1939)

077 436 6704, 077 179 1963

**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ். நகரப் பகுதியில் இயங்கும் தங்க நகை அடகு சேவை நிலையத்துக்கு A/L படித்த கணனி அறிவுள்ள பெண் வேலையாள் தேவை. (6534)

077 784 0379

**உடனடி வேலை வாய்ப்புகள்**

Helper, Driver(Heavy Vehicle), Sales Rep., Field Officer, Sales man, Sales Girl, Labourer (6532)

☎-074 138 3368

**சிறுநீரகம் தேவை**

44 வயது நபருக்கு 0+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை. (சன்மானம் வழங்கப்படும்.) (C-1926)

தொடர்பு 077 275 1546

**VACANCY**

Air Ticketing இல் ஆர்வமுள்ள அனுவலர்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை : 18-25 (6505)

T.P 021 222 8555 / 076 691 1082

Email : sbtravelsjaffna@gmail.com

**விற்பனைக்கு**

நல்லின பசுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. (6529)

தொடர்பு 077 663 1742

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஊரெழு, பொக்கணை வீதியில் முருகன் கோவிலுக்கு முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு.

(1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

077 505 8561

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.

(1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.) (6535)

077 623 4204

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**உடனடி வேலை வாய்ப்பு**



V2 TRAVELS விரைவு பொதிகள் சேவை (C-1895)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)

சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777 v2vacancies@gmail.com

**அன்னா** Express Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1842)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1841)

0768226240 DHL

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு ரொட்டி தயாரிப்பாளர், சமையல் உதவியாளர், கொத்து, பிறைட் றைஸ் போன்ற பணி நிலைகளுக்குரிய பணியாளர்கள் தேவை. (C-1920)

தகுதியுடையோர் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 649 1027

077 940 0963

**புலமைப் பரிசில் - 2021**

மாதிரிப் பரீட்சை - 01 இல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்.

- த. யாகாஷ் - 181 (யா / ஆனைப்பந்தி மெ.மி.வித். )
- சு. அஸ்வின் - 170 (யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி )
- சை. டக்ஷயன் - 130 (யா/யாழ். மத்திய கல்லூரி ) (C-1938)

அடுத்த பரீட்சை - 02 11.04.2021 (ஞாயிறு)

- விரும்பிய நேரங்களில் பரீட்சை.
- வெளிமாணவர்களும் பரீட்சை எழுத முடியும்.

புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

077 459 8440

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org (6413)

021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

**Techno World**

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2023 தொழினுட்பபிரிவு ஆரம்பம்

11.04.2021 ஞாயிறு காலை 9.00 மணி

- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

A/L 2021 Day Class புதிய பிரிவுகள் ஆரம்பம்

077 017 5346 (C-1933)

**IELTS** OUR TARGET IS BAND : 09

ACADEMIC
GENERAL
LIFE SKILLS - A1/ B1

- வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
- நாங்கள் IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (C-1930)

BRITISH COLLEGE OF ENGLISH

Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)

Tel: 021 222 0384, 077 880 3887


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 'வலம்புரி' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.